சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7	இதழ்: 09	பிப்ரவரி - 2026	விலை - ரூ.20/-
VOL:7	ISSUE: 09	February - 2026	Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.320/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-9 பிப்ரவரி-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

கடவுள் ஒருவர் தான் நம்மை காப்பவர். அவரைத்தவிர வேறு யாரும் இல்லை. அவருடைய எண்ணம் மட்டுமே ஈடேறும். கடவுள் அனைவரிடத்திலும் இருக்கிறார். அவர் நமக்கு கொடுப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்து கடவுள் கொடுப்பதை பக்தி சிரத்தையோடும் அடக்கத்தோடும் வாங்கிக்கொள்.

நீ தனியாக நடக்கிறாய் என்று நீ நினைக்காதே! உன் பாதை என்னால் வடிவமைக்கப்பட்டது என்பதை உணர்ந்து கொள். நான் உன் வாழ்க்கையை உருவாக்கியவன். நான் உன்னுடன் எப்போதும் வசிக்கின்றேன். நீ சிந்தும் கண்ணீர் மற்றும் வலிகளை நான் நன்கு உணர்வேன்.

எனவே நானே உன்னை குணப்படுத்தும் மருந்தாகவும், உன்னை ஏற்றிவிடும் ஏணியாகவும் இருக்கிறேன். எனது கண்களை நன்றாக உற்றுப் பார். உன் வலிகளை மௌனமாகக் குணப்படுத்தி, உனக்காக நல்ல நேரத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கிறேன். நான் உன்னைப் பாதுகாப்பேன். உன் மீது அன்பாக இருக்கிறேன். என் அனுமதி இல்லாமல் எதுவும் நடக்காது எதையும் செய்ய முடியாது. எந்த தீங்கும் உன்னை அணுகவிட மாட்டேன்.

எனது வாக்கின்மீது எப்போதும் திருப்தி உள்ளவனாக இரு. சஞ்சலத்திற்கோ கவலைக்கோ எப்போதும் இடம் கொடுக்காதே. நீ துவாரகாமாயியின் குழந்தை. துவாரகாமாயியின் நிழலில் வாழ்பவர் சுகத்தையும் சாந்தியையும் வாழ்க்கை முழுவதும் அனுபவிப்பார்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் தொன்னூற்றி ஒன்றாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 9/1கி, பழனியப்பா இரண்டாவது தெரு, சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத இதழை " பாராயணப் பகலவன்" திரு. சுந்தர்சாய்ராம் அவர்கள் வெளியிட, சாயி பக்தை திருமதி.லக்ஷ்மி வினோதினி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள். மேலும் ஏராளமான சாயிபக்தர்கள் கலந்து கொண்டு புத்தக வெளியீட்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

விழாவில், திரு. சுந்தர் சாய்ராம், திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம், திரு. அகஸ்டின், திரு. ராஜசேகர், திருமதி. தனம், திருமதி, சுகுணா, திருமதி. இந்துமதி ஆகியோர் தங்களது கருத்துக்களை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டனர். திரு. பிரபு



அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். சாய் தியானாலயா ஆத்மஞான குழுவின் அன்னதானக் குழுவினர் அனைத்து பக்தர்களுக்கும் சுவையான மதிய உணவு அளித்து மகிழ்ந்தனர்.

பகவான் சாய்நாதரின் சாய் சத்சரிதம் வெறும் பாபாவின் சரிதத்தை மட்டும் நமக்கு புகட்டவில்லை. மாறாக அனைத்து தத்துவ விசாரணைகளையும் ஒருங்கே பிழிந்து வழங்குகின்றது. அது வெறும் பாடப்புத்தக நூல் அல்ல! ஒன்று முதல் ஏழு நாட்களுக்குள் படித்து முடிக்க.

முதலில் பாராயணம் என்றால் என்னவென்று அறிந்து கொள்ளுங்கள்.

பாராயணம் என்பது, தெய்வ சிந்தனையுடன், மனதை ஒருமுகப்படுத்தி, புனித நூல்களையோ அல்லது மந்திரங்களையோ திரும்பத் திரும்பச் சொல்வதாகும். இது சாதாரணமாகப் படிப்பதை விட ஆழமானது,

வழிபாட்டின் ஒரு பகுதியாக மன அமைதி, நன்மைகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்காகச் செய்யப்படுகிறது. இது சாய் சய்சரிதம், ராமாயணம், மகாபாரதம் கீதை, போன்றவற்றை





உச்சரிப்பது, அதில் உள்ள ஸ்தோத்திரங்களை ஜெபிப்பது போன்ற "வடிவங்களில்" உள்ளது.

நன்றாக புரிந்து கொள்ளுங்கள் நீங்கள் பாராயணம் என்ற மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிக்கு வேண்டிய பாடங்கள் புனித நூல்களின் "வடிவில் உள்ளது" அதை ஆழ்ந்து படித்து செயல் முறையில் அறிந்து கொள்வதே "பாராயணம்" ஆகும்.

எனவே பகவான் சாயிநாதரின் சத்சரிதத்தை பாடப்புத்தகத்தைப் போன்று வகுப்பில் வெற்றி பெற்றால் போதும் என்று படிக்காதீர்கள். நமது இந்தப் பிறவி புனிதம் பெற்று முக்தி பெற வேண்டும் என்று படியுங்கள். ஆற அமர படியுங்கள்.

சத்சரிதத்தில் வரும் ஒவ்வொரு கதைக்கும் ஒரு உட்பொருள் உண்டு என்று படித்து சிந்தியுங்கள்.

சாயி சத்சரிதம் நமது வாழ்க் கைக்கும், ஆன்மீக வாழ் விற்கும் வழிகாட்டும் பேரொளி! என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அதை உணர்ந்து அனுபவிக்க முயற்சி செய்யுங்கள். விரைவாகக் கடந்து போகாதீர்கள். பொறுமையாகப் படித்து பயன் பெறுங்கள்.

நம்பிக்கை! பொறுமை!

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 90 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு.லோகேஸ்வரி கார்த்திக், வாடிப்பட்டி. ரூ.500.
திரு. விக்னேஷ். பின்லேந். ரூ.250.
திருமதி. ராஜலட்சுமி, தஞ்சை.ரூ200
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திருமதி. சுலோசனா, குடந்தை. ரூ.200.
திரு.சம்பத்ராஜன், திருவள்ளூர். ரூ.150.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திரு. நடராஜன். மயிலாப்பூர். ரூ.100.
திரு. ராஜாராம், சென்னை. ரூ.100.

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

சாய்சரிதம்-23



கதை வடிவில்

இந்த அத்தியாயத்தில் இந்த பாபாவின் கதைகளைக் கூறு கின்றேன் என்பதே ஒரு வகையான அகங்காரம்தான். சற்குருவின் பாதங்களில் நமது அகங்காரத்தை சமர்பிக்கவில்லை என்றால் நமது வேலையில் நாம் வெற்றிபெற மாட்டோம்.

சாயிபாபாவை பூரணமாக சரணடைவதால் அனைத்து சௌபாக்கியங்களும் நமக்குக் கிடைக்கின்றன என்பதே சத்தியம்.

யார் ஒருவர் நிம்மதியான வாழ்க்கையை பெற விரும்பு கிறாரோ, அவர் பாபாவின் கதைகளையும், லீலைகளையும் பக்தியுடன் கேட்டு, தியானம் செய்ய வேண்டும். இவைகளை ஒருவர் நம்பிக்கையுடன் செய்தால் அவர் தமது வாழ்க்கையின் லட்சியத்தை சுலபமாக அடைந்து பேரானந்தத்தைப் பெறுவார்.

பொதுவாக அனைவரும் அடுத்தவரை கிண்டல் செய்வதையே விரும்புவர். ஆனால் தன்னை அடுத்தவர் கிண்டல் செய்வதை விரும்பமாட்டார்கள். ஆனால் பாபாவின் வழியோ மிகவும் விசித்திரமானது. அவை பாபாவால் நிகழ்த்தப்படும்போது, மக்களுக்கு மிகவும் ஆர்வம் ஊட்டுவதாகவும், அறிவுரை தருவதாகவும் இருக்கின்றன. எனவே அவர்கள் கேலிக்குண்டானாலும் அதை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

இதோ அப்படிப்பட்ட கிண்டலுக்கு ஆளான என்னுடைய சொந்த அனுபவத்தை கூறுகின்றேன் கேளுங்கள். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. சீரடியில் சந்தை நடைபெறும் நாள். அருகில் இருக்கும் கிராமங்களில் இருந்து வியாபாரிகள் சீரடிக்கு வந்து கடைகளைப்போட்டு தங்களது பொருட்களை எல்லாம் விற்பனை செய்வர். வியாபாரம் முடித்தும் மக்கள் அனைவரும் பாபாவைப் பார்க்க மசூதிக்கு வருவார்கள். எனவே அன்று மாலை மசூதியில் மூச்சு திணறும் அளவிற்கு கூட்டம் கூடும்.

அத்தகைய ஒரு ஞாயிற்றுக் கிழமையின் போது, நான் பாபாவின் முன்னால் அமர்ந்து பாபாவின் கால்களை பிடித்து விட்டுக் கொண்டும், சாய்ராம், சாய்ராம் என்னும் நாமத்தை முணு முணுத்துக் கொண்டும் இருந்தேன். சாமா பாபாவின் இடப்பக்கத்திலும், வாமன்ராவ் வலப்பக்கத்திலும் அமர்ந்திருந்தனர்.

அப்போது சாமா என்னை



– வே.ஸ்ரீராம்

நோக்கி, என்ன அண்ணா சாகேப் உமது கோட் மடிப்பில் கடலைப் பருப்புகள் இருக்கின்றதே! என்று எனது கோட் மடிப்பை தொட்டு அதிலிருந்து சில கடலைப் பருப்புகளை எடுத்துக் காட்டினார். நான் அது எப்படி என் கோட்டில் வந்தது என்று பார்ப்பதற்காக கையை நீட்டினேன். அப்போது எதிர்பாராத விதமாக என் கை மடிப்பில் இருந்து கடலை பருப்புகள் கீழே உருண்டோடின. அதை அங்கிருந்த பாபாவின் பக்தர்களால் பொறுக்கி எடுக்கப்பட்டன.

இது அங்கிருந்தவர்களுக்கு என்னை கிண்டல் செய்ய போது மானதாக இருந்தது.

அனைவரும் இவ்வளவு கடலைப் பருப்புகள் எப்படி எனது கோட் மடிப்பில் இருந்தது என்று கூறி கிண்டல் செய்தார்கள். நானும் பலவாறாக யோசித்தும் எனது கோட் மடிப்பில் இவ்வளவு கடலைப் பருப்புக் எப்படி வந்தது என்று கண்டுபிடிக்கமுடியவில்லை.

அப்போது பாபா கூறினார், அண்ணா சாகேப்பிற்கு தனியாக தின்னும் பழக்கம் இருக்கின்றது. இன்று சந்தைநாள் அல்லவா? அண்ணா வரும்போது ஏதோ தின்றுகொண்டுதான் வந்தார். அவரது பழக்கம் எனக்குத் தெரியும். அதற்கு இதுவே சாட்சி என்று கிண்டலடித்தார்.

எனக்கு சற்றே அவமானமாக இருந்தது. இருப்பினும் பொறுமையாக பாபாவிடம், பாபா எந்த உணவுப் பொருட்களையும் இதுவரை நான் தனியாக தின்றதில்லை. உங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை. பின்னர் ஏன் என்மீது இதுபோன்ற வீண் பழியைச் சுமத்துகின்றீர். நான் இதுவரை சீரடி சந்தைக்கு போனதே இல்லை. அப்படியிருக்க நான் எப்படி சந்தையில் கடலைப்பருப்பு வாங்கியிருக்க முடியும். அவைகளை நான் வாங்காதபோது எப்படி தின்றிருக்க முடியும். என் அருகில் உள்ளவர்களுக்கு பகிர்ந்து கொடுக்காமல் நான் ஒரு போதும் தனியாக தின்றதில்லை பாபா என்று கூறினேன்.

உடனே பாபா, அருகில் இருப்பவர்களுக்கு நீர் கொடுப்பது உண்மைதான். ஆனால் ஒருவரும் அருகில் இல்லை என்றால் நீயோ, நானோ என்ன செய்ய முடியும்? ஆனால் நீ எதையாவது உண்ணும் முன் என்னை நினைத்துக் கொண்டதுண்டா? எப்போதும் நான் உன்னுடன் இருக்கவில்லையா? என்று கேட்டார்.

அப்போதுதான் இந்நிகழ்ச்சியின் மூலம் பாபா எனக்கு ஏதோ கூற வருகின்றார் என்று புலப்பட்டது. எனவே பாபாவிடம் விடைபெற்று எனது தங்குமிடம் வந்து தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தேன். எனக்குள்ளாக இருந்து பாபாவே அதற்குண்டான விளக்கத்தை தருவதைக் கண்டேன்.

முதலாவதாக புலன்கள் தனக்குண்டான இன்பதுன்பங்களை அடையும் முன்பே, மனமும், அறிவும் அவைகளின் பலன்களை அனுபவித்துவிடுகின்றன என பாபா சூட்சுமமாக கூறியிருக்கின்றார். எனவே முதலில் குருவை நினை. உன் மனதில் குரு குடிகொண்டிருக்கின்றார் என்றால் எதுவாக இருந்தாலும் முதலில் குருவை நினைத்தால் அது குருவிற்கு நிவேதனம் என்றுதானே அர்த்தம்.

புலன்கள் தங்கள் தேவைகளை அடையாமல் இருக்க முடியாது. புலன்களுக்குண்டான உணவையோ, இன்பத்தையோ, துன்பத்தையோ முதலில் குருவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுவிட்டால் அவைகளின் மீதுள்ள பற்று இயற்கையாகவே மறைந்து விடுகிறது.

இவ்வாறாக ஆசை,கோபம், வெறுப்பு, போன்ற நமது எல்லா எண்ணங்களும் முதலில் குருவிற்கு சமர்ப்பிக்கப்பட்டால், கடவுள் உனக்கு எல்லாவிதங்களிலும் உதவி செய்வார்.

பொருட்களை அனுபவிப்பதற்கு முன்பு பாபா அருகில் இருப்பதாக நினைத்துக் கொண்டால், அப்பொருளை நாம் அனுபவிக்கலாமா? வேண்டாமா?



என்ற கேள்வி எழும். பின்பு அனுபவிக்க வேண்டாம் என்றால் அவை நம்மால் ஒதுக்கப்பட்டு நமது தீய செயல்கள் நம்மைவிட்டு மறைகின்றன.நம்மிடம் நற்பண்புகள் வளர்கின்றன அல்லவா?

அதன்பின்னர் குருவிடம் உள்ள அன்பு வளர்ந்து தூயஞானம் வரும். ஞானம் வளரும்போது, நான், எனது என்ற எண்ணம் அழிந்து நமது அறிவு ஆன்ம உணர்வுடன் கலக்கின்றது. பின்னர் நாம் ஆனந்தத்தையும், அமைதியையும் அடைகின்றோம். குருவிற்கும் கடவுளுக்கும் பேதமில்லை. அவர்களுக்குள் பேதம் பார்ப்பவன் ஒருபோதும் கடவுளை காணமாட்டான்.

எனவே பேத மனப்பான்மையை ஒழித்து குருவையும், கடவுளையும் ஒன்றாகக் கருத வேண்டும்.

இவ்வாறு நமது குருவிற்கு சேவை செய்தோமானால் கடவுள் மகிழ்வடைந்து நமது மனதினை தூய்மைப்படுத்தி, நம்மை நாமே அறிந்து கொள்ளும் உணர்வை அளிக்கின்றார். அதுவே ஆத்மஞானம். எனவே எப்பொருளேயாயினும் முதலில் குருவிற்கு சமர்ப்பிக்கப்படாமல் நம் புலன்களின் வழியாக அனுபவிக்கக் கூடாது என்பதையே பாபா சுட்டிக்காட்டு கின்றார் என்பதை அறிந்து கொண்டேன்.

இதை நான் யோசித்து அறிந்த கொண்டபோது எனக்கு சுதாமரின் கதையும் ஞாபகத்திற்கு வருகின்றது.

கிருஷ்ணரும், பலராமர், சுதாமர் ஆகிய மூவரும் சாந்தீபினி என்ற குருவின் ஆசிரமத்தில் குருகுலவாசம் செய்தனர். ஒரு முறை மூவரும் காட்டிற்கு விறகு சேகரிக்கச் சென்றனர். அப்போது சாந்தீபினி முனிவரின் மனைவி சுதாமரிடம் கடலைப்பருப்புகளை ஒரு மூட்டையாகக் கட்டி மூவருக்கும் பசிக்கும் போது சாப்பிடச்சொல்லி கொடுத்தாள்.

வெகுநேரம் விறகு சேகரித்து விட்டதால் கிருஷ்ணர்

களைத்துப்போய் சுதாமரிடம் கொஞ்சம் தண்ணீர் கொடு, எனக்குத் தாகமாய் இருக்கின்றது என்று கேட்டார் அதற்கு சுதாமர், வேலை செய்துவிட்டு வெறும்வ யிற்றில் தண்ணீர் குடிக்கக் கூடாது. சற்று ஓய்வெடுத்துவிட்டு பிறகு குடிக்கலாம் என்று கூறினார். அவர் தன்னிடம் கடலைப்பருப்புகள் இருப்பதாகவோ, அதை சிறிது சாப் பிட்டு விட்டு தண்ணீர் குடிக்கலாம் என்றோ எதுவும் கூறவில்லை.

பிறகு களைப்பின் மிகுதியால் கிருஷ்ணன் சுதாமரின் மடியில் தலை வைத்து படுத்து குறட்டை விட்டார். கிருஷ்ணர் தூங்கி விட்டதை அறிந்த சுதாமர் தன்னிடம் இருந்த கடலை மூட்டையை பிரித்து உண்ணத்தொடங்கி விட்டார். கிருஷ்ணர் திடீரென விழித்துக்கொண்டு, சுதாமா என்ன சாப்பிடுகின்றாய்? சாப்பிடும் சப்தம் எங்கிருந்து வருகின்றது என்றார். அதற்கு சுதாமர், சாப்பிடு வதற்கு இங்கு என்ன இருக்கிறது. நானே குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கின்றேன். குளிரில் என் பற்கள் தானாகவே தாளம் அடித்துக் கொண்டிருக்கின்றன. அந்த சத்தம்தான் உனக்கு சாப்பிடு வது போல் கேட்கின்றது என்றார்.

உடனே எல்லாம் அறிந்த மாயக்கார கண்ணன், இல்லை, இல்லை அடுத்தவரின் உணவை திருடி திண்ணும் ஒருவனை கனவில் கண்டேன். அவனிடம் என்ன தின்கிறாய் என்று கேட்டேன். அதற்குள் கனவு கலைந்துவிட்டது எனவே தூக்க மயக்கத்தில் உன்னிடம் கேட்டுவிட்டேன். நீ கவலைப்படாதே! அது வெறும் கனவுதான். நீ எதையும் எனக்கு தராமல் உண்ண மாட்டாய் என்பது எனக்குத் தெரியும் என்றார் கிருஷ்ணர்.

கிருஷ்ணரைப்பற்றியும், அவரது லீலையைப் பற்றியும் சுதாமர் கொஞ்சமாவது அறிந்திருந்தால் அவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டார். எனவே பிற்காலத்தில் தன் செய்கைக்காக மிகவும் வருந்தவேண்டியதாயிற்று. அவர் கிருஷ்ணரின் நெருங்கிய நண்பராக இருந்தபோதிலும், அவர் தனது வாழ்க்கையை தரித்திரமாக ஓட்டவேண்டியிருந்தது. ஆனால் பிற்பாடு அவர் தனது மனைவியின் சொந்த உழைப்பில் உருவான ஒரு பிடி அவலை கிருஷ்ணருக்கு கொடுத்துபோது ஸ்ரீ கிருஷ்ணர் மகிழ்ச்சியடைந்து சுதாமரின் வறுமையை நீக்கி அவரை பொன் நகரத்தில் வாழ வைத்தார்.

அடுத்தவருடன் பகிர்ந்து உண்ணாமல் தான் மட்டும் உண்ப வர்கள் இக்கதையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எதையும் முதலில் கடவுளுக்கு சமர்பிக்க வேண்டும். பிறகே நாம் அதை அனுபவிக்க வேண்டும். என்பதையே என்னை வைத்து பாபா கேலியும் கிண்டலாகவும் கதை சொல்லியிருக்கின்றார் என் பதை நன்குணர்ந்து கொண்டேன்.

இதேபோன்று மற்றொரு வேடிக்கை கதையையும் கூறுகின் றேன் கவனமாகக் கேளுங்கள். அண்ணாசிஞ்சணீகர் என்ற சாயி அடியவர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் எளிமையானவர், நேர்மையானவர் ஆனால் முரட்டுத்



தனமானவர். எவரையும் லட்சியம் செய்ய மாட்டார். யாரிடமும் அவர் பயப்படமாட்டார். சற்றே கராரான பேர்வழியாக இருந்தாலும் கள்ளம் கபடமற்றவராக இருந்தார். எனவே பாபா அவரை அதிகமாக நேசித்தார். அவர் தனது சொத்துக்களை எல்லாம் தனது கடைசி காலத்தில் சீர்டி சாய் சமஸ்தானத்திற்கு எழுதி வைத்தார்.

அண்ணாசிஞ்சணீகர் பாபாவின் வலதுபுறம் நின்று கொண்டு பாபாவின் வலது கையை பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார். இடதுபுறம் பாபாவால் அம்மா என்று அழைக்கப்பட்ட கிழவிதவையான மாவசிபாயி என்பவள் வலதுபுறக்கையை பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள். அண்ணாசிஞ்சணீகர் அவர்கள் ஆடாமல் அசையாமல் நின்று பாபாவிற்கு சேவை செய்து கொண்டிருக்க, மாவசிபாயி முன்னும் பின்னும் ஆடிக்கொண்டே சேவை செய்தாள்.

ஆகவே ஒவ்வொரு முறையும் மாவசிபாயியின் முகம் அண்ணாசிஞ்சணீகர் முகத்திற்கு அருகில் வந்து வந்து போனது. ஒருமுறை மிக அருகில் வந்து விட்டது. மாவசிபாயி மிகவும் வேடிக்கையான குணம் உடையவள். ஆதலால் அண்ணாசிஞ்சணீகரை கிண்டல் செய்யும் விதமாக, " ஓ! இந்த அண்ணா மிகவும் மோசமானவன். பாபாவிற்கு கை பிடித்துவிடும் சாக்கில் அவன் என்னை முத்தமிடவருகின்றான். அவனுக்கு தலை நரைத்தும் ஆசை போகவில்லை" என்று கிண்டலாகக்கூறினாள்.

இச்சொற்கள் அணணாசிஞ்சணீகரை மிகவும் கோபம் அடையச்செய்தன. முஷ்டியை மடக்கிக்கொண்டு, என்னை கெட்ட குணம் கொண்டவன் என்றா கூறுகின்றாய் நான் என்ன அவ்வளவு முட்டாளா? தேவையில்லாமல் என்னுடன் சண்டைக்கு வருகின்றாயா? நீ தான் கெட்டவள் என்றார்.

அப்போது அங்கிருந்த அனைவரும் இந்த சண்டையை ரசித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரையுமே பாபா சமமாக நேசித்தார். அவர்கள் இருவருக்குமிடையே சண்டையை நிறுத்த சமயோசிதமாக அண்ணாவைப்பார்த்துக் கூறினார். "அண்ணா ஏன் அநாவசியமாக கோபப்படுகின்றாய்? ஒரு தாய் தன் மகனுக்கு முத்தமிடுவதில் தவறென்ன? உன்

கோபத்திற்குண்டான காரணம் எனக்கு விளங்கவில்லையே" என்றார். பாபாவின் இம்மொழிகளைக்கண்ட இருவரும் திருப்தியடைந்து சண்டையை நிறுத்தினர். அங்கிருந்தவர்கள் அனைவரும் தங்கள் உள்ளம் நிறைவடையும்வரை சிரித்து மகிழ்ந்தனர்.

பாபாவின் அடியவர்கள் அவர்களின் விருப்பப்படியே பாபாவிற்கு சேவை செய்ய அவர் அனுமதித்திருந்தார். அதில் அடுத்தவர் தலையிடுவதை அவர் விரும்புவதில்லை. உதாரணமாக இதே மாவசிபாய் ஒருமுறை பாபாவின் வயிற்றுத் தசைகளை பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள். அவள் பிடித்துவிடும் வேகத்தைப்பார்த்து, மற்ற அடியவர்கள் பயந்துபோய், "ஓ! அம்மா கொஞ்சம் நிதானமாக பிடித்துவிடு, நீ பிடிக்கும் வேகத்தைப்பார்த்தால் பாபாவின் ரத்தக்குழாய்களையும், நரம்புகளை உடைத்துவிடுவாய் போலிருக்கின்றது" என்று அவளிடம் கூறினார்கள்.

பாபா உடனே கோபம் கொண்டு தம் இருக்கையில் இருந்து எழுந்து தமது சட்காவைத் தரையில் ஓங்கி அடித்தார். அவரது கண்கள் தீப்பிழம்பைப் போன்று ஆனது. ஒருவருக்கும் அவர்முன் பேச தைரியம் வரவில்லை. பின்னர் அவர் சட்காவின் ஒருமுனையை தன் வயிற்றில் வைத்து, மறுமுனையை தூணில் வைத்து அழுத்தத் தொடங்கினார். மூன்றடி உள்ள சட்கா முழுவதும் அவரின் வயிற்றுக்குள் சென்றது போலிருந்தது.

இக்காட்சியைக்கண்ட அனைவரும் செய்வதறியாது திகைத்தனர். இன்னும் சற்றுநேரம் அவ்வாறு செய்தால் பாபாவின் வயிறு கிழிந்து விடும் போலிருந்தது. சுற்றி இருந்தவர்கள் அனைவரும் இக்காட்சியைக் கண்டு பீதியடைந்து என்ன செய்வது என்றறியாமல் கையைப் பிசைந்து கொண்டு நின்றனர். மாவசிபாயின் சேவையால் பாபாவிற்கு ஏதும் துன்பம் ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் அடியவர்கள் அவ்வார்த்தையைக் கூறினார்கள். பாபா அதைக்கூட பொறுக்கவில்லை. அவர் தம் அடியவர்களுக்காக தன்னையே இவ்விதமாக வருத்திக்கொண்டார்.

அடியவர்களுக்கு பாபாவின் செய்கையை காத்திருந்து பார்ப்பதைத்தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. நல்லவேளையாக பாபாவின் கோபம் சட்டென்று குறைந்தது. அவர் குச்சியை விட்டுவிட்டு தன் இடத்திற்கு வந்தமர்ந்தார். இதிலிருந்து அடியவர்கள் மற்றவர்களின் சேவையில் குறுக்கிடக்கூடாது என்றும் அடியவர்கள் தாங்கள் விரும்பியபடியே பாபாவிற்கு சேவை செய்யலாம் என்ற பாடத்தை தெரிந்து கொண்டனர். ஏனெனில் அடியவர்கள் செய்யும் சேவையின் மதிப்பையையும், தகுதியையும் பாபாவே அறிந்து கொள்ளும் வல்லமையுடையவராக இருந்தார்.

ஸ்ரீசாயியைப்பணிவோம்!அனைவருக்கும் சாந்தி உண்டாகட்டும்.

தொடரும்



தொடர் - 32

திருவருள் தேடி

சத்குரு சாய் மஹராஜ் ஸ்வர்ண கமல பாதம் பணிந்து, குரு வாழ்க குருவே சர்வம் சகலம் சதா என்று அறிந்து, தெளிந்து, உணர்ந்துய்வோம். நமது சாய் பந்துக்கள் அனைவர்க்கும் சுந்தர் சாய் இதய பூர்வமான, வணக்கத்துடன் கூடிய, நல்வாழ்த்துக்கள். வாழ்க வளமுடன் எந்நாளும் நலமுடன் குரு கடாக்ஷம் பரிபூரணமாகட்டும்.

சத்குருவருளே திருவருளாய் நம்மை தேடி நாடி வந்து மலர்ந்து மணம் பரப்பும் நமது வாழ்க்கை மாற்றத்தை, நிஜமான ஆன்மீக முன்னேற்றத்தை தொடர்ந்து உங்களுடன் பகிர்ந்து அனுபவிப்பதில் பரம திருப்தி. குருவே நம்மை நன்கு அறிந்து, பூர்வ வாசனைகளை புரிந்து வழி நடத்தி உயிர் நிலை உணர்த்தும் அற்புதம் ஒவ்வொருவர் வாழ்விலும் நிகழ்ந்திட வாய்ப்பு நல்கிட வேண்டும் என ஆத்மார்த்தமாய் பிரபஞ்ச பேராற்றாலை இரு

சுந்தர் சாய்
9789404451

கரம் கூப்பி சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.

நமது ஆன்மீகப் பயணத்தில் நம்மை வழி நடத்த பலர் நம்மோடு கரம் கோர்த்து பயணித்து அவரவர் வேலை, வேகம் மாறும் பொழுது பிரிந்து சென்று விடுவார்கள். அந்த வகையில் நமக்கு சுமார் 8 வருடங்கள் முன்பு கிடைத்த அறிமுகம் இதுநாள் வரை நெருக்கமான தொடரும் ஒரு நட்பு என்றால் அது குண்டலினி யோகி ஸ்ரீராம் பாபா அவர்களுடன்தான். ஆம் அவர் சாய் மகராஜ் குருவை தேடி இதழின் ஆசிரியர் மற்றும் சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தின் அமைப்பாளரும் ஆவார்.

எங்கள் முதல் சந்திப்பு, மறைந்த நண்பரும், "சாய் என் வாழ்க்கை உன்னோடுதான்" ஆசிரியருமான திரு.சிவநேசன் சாய்ராம் அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவில்தான் நிகழ்ந்தது. விழாவில். பிரார்த்தனை செம்மல் திரு.கலியன் ஐயா, திரு. கோபால் ஐயா, திரு. சிம்மக்குரல் சந்திரன் ஐயா, குருவருள் வேண்டி திரு. அசோக் குமார் சாய், அன்பர்கள் திரு.உதி மூர்த்தி, திரு. ராமமூர்த்தி, திருமதி.சுமதி அம்மா,சாய் பஜன் திருமதி.ஜெயலக்ஷ்மி போன்ற நட்பு வட்டாரத்தினோடு அருமையான சத்சங்கம் நிகழ்துபவராக அவருடன் முதல் சந்திப்பு நிகழ்ந்தது.


அது ஓர் இனிய அனுபவம்.

கூட்டு பிரார்த்தனையில் மாறி மாறி கலியன் சாய் அல்லது ஸ்ரீராம் சாய், பங்கேற்க, சிறப்பு அன்னதானம், சாய் பஜன், புத்தக வெளியீடு, சத்சங்கம் என அமர்க்களமாக நடைபெற்ற நாட்கள் இன்றும் என் நினைவினில் தேனாய் இனிக்கின்றது. சாய் மகாராஜுடன் ஐக்கியமான சிவநேசன் அவர்கள் ஆன்மாவிற்கு இந்நேரத்தில் ஒரு நன்றி கலந்த வணக்கத்தை காணிக்கையாக்குகிறேன்.

அந்த நாட்களில் ஓர் "வணக்கம் சாய்ராம் " தவிர எங்களுக்குள் நெருக்கம் அதிகம் இல்லை என்பதே உண்மை. நாங்கள் வேறு இடங்களில் சந்திக்கவோ சம்சாரிக்கவோ வாய்ப்பு கிட்டவில்லை எனலாம். ஒரு சத்சங்கத்தில் ஸ்ரீராம் ஐயா அவர்கள் சாய் பற்றிய ஆன்மீக மாத இதழ் தொடங்க இருக்கிறார் எனும் அறிவிப்பு செய்த சமயம் தான் எனது கவனம் சற்றே அவர் பக்கம் திரும்பியது.

நமது பேரன்பிற்குரிய சாய் மஹராஜ் சேவையில் வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் நாமும் சென்று கலந்து கொள்ள ஆர்வமாய் இருந்ததே, இந்த நெடுநாளைய நட்பிற்கு காரணமாய் அமைந்தது. சாய் மஹராஜ் குருவைத்தேடி மாத இதழ் தொடக்க விழாவில் திரு. சிவநேசன், திரு.அசோக் குமார் சாய், திரு. மாதவராஜ் சாய் மற்றும் சாய் அன்பர்களுடன், நானும் கலந்து கொண்டது இன்னும் பசுமையாய் நினைவில் இருக்கிறது.

பாபாவின் திருவருளால் சுமார் 8 ஆண்டுகள் முன்பு ஆரம்பிக்கப் பட்ட பணி என்பது இன்றளவும் கொரானா போன்ற பல சவால் களை எதிர்கொண்டபோதும் அச்சுப்பிரதியாக இம்மாதம் 91வது இதழாக வெளிவருவதே சாட்சி.



இயன்ற வரை வெளியீட்டு விழாக்களிலும், நட்பு ரீதியிலும் எங்கள் பயணம் தொடர்வதுடன் நில்லாது, பல அன்பர்களை அவர் கள் இல்லத்திற்கே சென்றும், பிரச் சனைகளுக்கான தீர்வு, நம்பிக்கை ஒளி ஊட்டி, தியானப் பாதையில் ஸ்ரீராம் பாபா அவர்கள் வழி நடத்துவதும் சேவைகள் தொடர்வ தும் சமர்த்த சத்குரு சாய் மஹராஜ் பரிபூரண கிருபையினால் மட்டுமே.

ஆரம்ப நாட்களில், அமைதி யாக காட்சிதந்த ஸ்ரீராம் பாபா அவர் களின் அருமையும், பெருமையும் எமக்கு புரியவில்லை. நீண்ட நாட்கள் பழகியும் அவராக எதுவும் சொல்வதும் இல்லை. தனக்கு இவை எல்லாம் தெரியும் என்பதையும் அவர் வெளிக்காட்டுவதில்லை, அவரது செயல்கள் மட்டுமே அவரை உணர்த்தும்.

உதாரணத்திற்கு, எனது 40ஆண்டு கால நட்ப்பான ஓர் குடும்ப நண்பரின் வாழ்வில் பல சோதனைகள். அவர் வாழ்வின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டு மனம் வெறுத்த நிலையில் என்னை தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருந்தார். அப்போது நான் என் மொபைல் நம்பரை மாற்றி இருந்ததால் என்னை தொடர்பு கொள்ள முடியவில்லை.

இருப்பினும் இறையருள் கூடிவரவே என் சகோதரியை தொடர்பு கொண்டு என் புது நம்பர் அறிந்து போன் செய்தார். நானும் நிலைமை உணர்ந்து உடனே நண்பரைச் சந்தித்து, விவரங்கள் தெரிந்து கொண்டு அவருக்கு உதவி செய்ய எண்ணி வேறு ஒருவரிடம் அழைத்து சென்றேன். அங்கு அவரது பிரட்சனை தீர தாமதம் ஏற்பட்டதோடு, குடும்ப மன அமைதி, வாழ்வாதாரம், பொருளாதாரம் என முற்றிலும் சீரியஸ் ஆகவிட்டது.

உடனடியாக நண்பரின் குடும் பத்திற்கு ஆக்சிஜென் தேவை என்ற நிலை ஆகிவிட்டது. அவர்கள் மிகவும் ஆச்சாரமான வைணவ பாரம்பரியம் உடையவர்கள். எனவே ஸ்ரீராம் பாபா அவர்களிடம் விவரங்களைத் தெரிவித்து, எப்படி யாவது பிழைத்தால் போதும் என்ற சூழ்நிலையில் ஸ்ரீராம் பாபாவை சந்திக்க ஏற்பாடு செய்தேன்.

அவரை இல்லத்தில் சந்தித்து விவரங்கள் பகிர்ந்து எப்படியாவது தங்களது குடும்பம் துக்க சாகரத்தில் மூழ்கிவிடாமல் காக்கும்படி உதவி கோரினார்கள். மிக உயர்ந்த படித்த,

அனுபவம் மற்றும் பெயர் பெற்ற கன்சல்ட்டன்ட். ஸ்ரீராம் பாபாவை சந்திக்கும் முன் அவர்கள் முயற்சித்த அனைத்து முயற்சிகளும் முடிவில் தோல்வியடைந்தன. நண்பரின் நெருங்கிய குடும்பத்தோரே நண்பரை அழிப்பதற்காக மாந்த்ரீக முறையில் செய்வினை செய்துமிக மோசமாக அவரது குடும்பத்தை அழிக்க முடிவெடுத்திருக்கிறார்கள்.

நிலைமை உணர்ந்து குருவும், தியானம் செய்து அவர்களுக்கு முழு நம்பிக்கை அளித்து எல்லாவற் றையும் எங்களிடம் விட்டுவிடுங்கள். பாபா தான் உங்களை இங்கு அழைத்து வந்திருக்கிறார். இனி எல்லாம் சீரடையும். வாழ்வாதாரம் சரியாகும். நேரம் போதவில்லை என்னும் அளவிற்கு வேலை வாய்ப் புக்கள் அமையும் என்ற தெய்வ வாக்கை அருளி நண்பரின் குடும் பத்தை மன நிம்மதி அடைய செய்தார்.


அவர்களது வீட்டில் குடியி ருக்கும் துர்சக்தியை முறியடிக்க உபாயங்கள் செய்து அழிப்பதற்காக, 9 வியாழக்கிழமை அவர்கள் வீட் டிற்கே வந்து தியானம் செய்து அவர் களது வாழ்க்கையில் மாற்றம் அளிப்பதாய் உறுதி கூறினார். அவர் களும் சற்றே மன அமைதியுடன் விடைபெறுச் சென்றனர்.

முழுமையாக வைணவ சம்ப்ரத யாத்தின் வழி வந்து, ஆராதனை, ஸஹஸ்ரநாம பாராயணம், ஏகாதசி விரதம் என்று பக்தியுடன் தெய்வ வழிபாட்டிலும் சிரத்தையுடனும் நம்பிக்கையுடனும் வாழ்கின்ற பொழுதிலும் இவ்வளவு கஷ்டங் களின் தாக்கமும், வழியறியாமல் ஜாதகம், பரிஹாரம் என முயற்சி செய்து உடைந்து போன மனதில் நம்பிக்கை துளிர்விட பாபா நம்மை தேர்ந்தெடுத்து, மறுபடியும் தொடர்பை ஏற்படுத்தி சாய் பக்தர்கள் அல்லாத பொழுதிலும், எல்லா தடைகளையும் உடைத் தெரிந்து அவர்கள் வாழ வழிய மைக்க ஸ்ரீராம் பாபாவை அணுக வைத்ததே ஓர் மிகவும் ஆச்சரிய மான அனுபவம். எனக்கும் தான்.

அவர்கள் வாழ்வில் மாற்றம் கிடைக்காதா, மர்மமான எதிர் மறை சக்திகளின் தீவினைகள் முடிவுக்கு வராதா என உச்ச கட்ட தவிப்பில் இருந்த சமயம், வழக்கமான அசைக்க முடியாத பலம் வாய்ந்த பாபாவின் அற்புத சக்தியில் நம்பிக்கை வைத்து, நானும் அவர்களுடன் கைகோர்த்து நிலையில் மாற்றம் வரும் வரை பயணிப்பதாகவும், யாமறிந்த ஆன்மீகப் பெரியோர்களிடம் அழைத்து சென்று தீர்வு காணலாம் என உறுதியாக வாக்களித்தேன்.

இதற்கிடையே, அவர்கள் வீட் டுக்கு நான் வருவதால் எனக்கும் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என பயம் வேறு அவர்கட்கு. நான் அவர்களிடம் எனக்கு பாபாவின் பாதுகாப்பு முழுமையாக இருப்ப தால் எந்த வித எதிர்மறை சக்தியும் எதுவுமே செய்ய முடியாது என்று அழுத்தமாக கூறினேன். என் அசைக்க முடியாத பாபா பக்தி மற்றும் நம்பிக்கை அவர்களை ஆச்சர்யப்பட வைத்தது.

ஸ்ரீராம் பாபாவும் மிகுந்த பரிவுடன், அவர்கள் இல்லத்திற்கு 9 வியாழன் கிழமை வந்து தனது



தவ சக்தியின் மூலம் துர்சக்தியை விரட்டியடித்து சொன்ன வாக்கை நிறைவேற்றினார். தியானத்தின் மூலம் முன்பே கணித்து கூறிய படி அவர்கள் மனதில் நன்னம்பிக் கையை விதைத்து, பொருளாதார முன்னேற்ற வாய்ப்புகள் பெருகி, வேலையில் நேரம் போறாமை என்பது நிதர்சனமாயிற்று.

இன்றும் அவர்கள் இடம் மாறி பம்பாய் குடி பெயர்ந்ததும் அவர் உரைத்தபடியே நடந்தேறியது. ஒரு விறுவிறுப்பான அற்புதம் என்ன வென்றால், சாய் ஸ்ரீராம் பாபாவை யும் என்னையும் எதிர்பாராமல் அஹோபிலம் மலை ஏறவைத்து அனுக்கிரஹம் செய்தது. அதைவிட மிகப்பெரிய ஆச்சர்யமாய் என்னை கிருத்திகா, சுப்ரமணியம் தம்பதிகளுடன் கொச்சின் அருகில் உள்ள சோட்டானிக்கரை பகவதி அம்மன் தரிசனம் செய்யவும், கிடைத்தற்கரிய வாய்ப்பாக "குருதி பூஜை" யில் கலந்து கொள்ளவும் களம் அமைத்து கொடுத்ததுதான்.

இந்த இரு இடங்களுமே, எதிர்மறை சக்திகளை முறியடித்து பாதுகாக்கும் ஸ்தலம் என்பது ஊரறிந்த உண்மை. நாங்கள் சிறிதும் திட்டமின்றி பயணம் செய்த அனுபவம் நம்மை பிரபஞ்ச சக்தி எவ்வளவு கருத்துடன் கவனித்து இயக்குகிறது என்பதற்கான சத்ய பிரமாணமாக அமைந்தது.எல்லாம் இறைவன் செயல் என்ற நம்பிக் கையுடன் நாம் தயாராக இருந்தால் எல்லோருடைய வாழ்க்கையிலும் இது சாத்தியமே. இதன் மூலம் நான் புரிந்து கொண்ட இரண்டு உண்மைகள், ஒன்று சாய் எனும் அகண்ட பிரஹ்மாண்ட பிரபஞ்ச சக்தி எம்மை இயக்கி சேவையில் ஈடுபடுத்துகிறது என்பது.

இரண்டாவது, ஸ்ரீராம் பாபா எனும் புண்ய ஆத்மாவின் நீண்ட பயணம், இன்னும் பற்பல சாதனைகள் செய்ய இருக்கின்றது என்பதும், அவரிடம் மறைந்திருக்கும் அபார தெய்வீக சக்தியின் மூலம் அவரை நாடுபவர்க்கும், தேடுப வர்க்கும் பெரியளவில் பயன்பெறப் போகிறார்கள் என்பது சர்வ நிச்சயம். அத்தகைய அபூர்வ சக்திதான் அவர் அளிக்கும் ஆத்ம ஞானப் பயிற்சி. அதை எவ்வித எதிபார்ப்புமின்றி நமக்கு வழங்கிட "எவர் ரெடி" யாய் இருக்கும் ஸ்ரீராம் பாபாவின் தகை மையை நாம் சரியாக உபயோகிக்க வேண்டும். நமது மேன்மைக்காய்.

மீண்டும் நமது அனுபவங்களை வரும் இதழில் தொடர்வோம் நண்பர்களே. குரு வாழ்க! குருவே துணை!

தொடரும்



வியக்க வைக்கும் விளாம்பழம்

விளாம் மரத்தின் வேர், இலை, காய், பிசின், பழம் போன்றவை மருத்துவக் குணங்கள் கொண்டவை. இலைகளில் சபோரின், வைடெக்ஸின் காணப் படுகிறது. மரத்தின் பட்டையில் பெரோநோன், டேரைகைன் இருக்கிறது. இப்பழத்தில் வைட்டமின் ஏ, பி1, பி2 இரும்பு சத்து ஆகியவை உள்ளது.

விளாம்பழம் குடல் புழுக்களை அழித்து பேதிகளை குணமாக்குகிறது. மேலும் வயிற்று புண், வயிற்று போக்கு, அஜீரண போன்ற பிரச்சனைக்கு நல்ல தீர்வாக இருந்து வருகிறது. இந்த பழம் பித்தப்பை பிரச்சனைகளை தீர்க்கும் அருமருந்தாகவும் செயல் படுகிறது.

உடலில் உண்டாகும் அஜீரண குறைபாடு, பசியின்மை, கோழை அகற்றுதல், பல் எலும்பு உறுதிபட, உடல் உள் உறுப்புகள் வலுப்பட என பல வகைகளில் விளாம்பழம் சிறப்பாக பலன் தருகிறது.விளாம்பழத்தை தினமும் சாப்பிடுவதால், மூட்டு வலி, உடல் வலி போன்றவற்றை போக்கும். மேலும் இதய துடிப்பை ஒரே சீராக வைத்திருக்கும்.

விளாம்பழம் அஜீரணக் கோளாறு பிரச்சனைகளை நீக்கி, பற்களுக்கு உறுதியளிக்கிறது. தயிருடன் விளாம்பழத்தை தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் எலும்புகள் வலுவடையும்.

விளாம்பழத்துடன் பனங்கற் கண்டைக் கலந்து சாப்பிட்டால் பித்தம், வாந்தி, தலைச் சுற்றல் ஆகியவை நீங்கும். மேலும் விளாம்பழத்தில் உள்ள சதைப் பகுதியை எடுத்து அதனுடன் சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால் உடல் வளர்ச்சிக்கு நல்ல மருந்தாக இருக்கும்.

விளாம் மர இலையை தண்ணீரில் போட்டு, கொதிக்க வைத்து குடித்தால் வாயுத்

தொல்லை நீங்கும். மேலும் நரம்புத் தளர்ச்சி விரைவில் குணமடையும்.

விளாம்பழத்தில் வைட்டமின் பி2 மற்றும் கால்சியம் சத்து அதிகமாக எலும்பு மற்றும் பற்களை வலுடையச் செய்கிறது.

விளாம்பழம் பல வியாதிகளை குணப்படுத்தும் சிறந்த பழமாகும். இதில் இரும்பு சத்தும், சுண்ணாம் புச்சத்தும், வைட்டமின் ஏ சத்தும் உள்ளது. இப்பழத்துடன் வெல்லம் சேர்த்து பிசைந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பித்தம் சம்மந்தமான அனைத்து கோளாறுகளும் குணமாகும்.

பித்தத்தால் தலை வலி, கண்பார்வை மங்கல், காலையில் மஞ்சளாக வாந்தி எடுத்தல், சதா வாயில் கசப்பு, பித்த கிறுகிறுப்பு, கை கால்களில் அதிக வேர்வை, பித்தம் காரணமாக இளநரை, நாவில் ருசி உணர்வு அற்றநிலை இவைகளை விளாம் பழம் குணப் படுத்தும்

விளாம்பழத்திற்கு ரத்தத்தில் கலக்கும் நோய் அணுக்களை சாக டிக்கும் திறன் உண்டு. எனவே எந்த நோயும் தாக்காமல் பாதுகாக்கும். அஜீரண குறைபாட்டை போக்கி பசியை உண்டுபண்ணும் ஆற்றலும் விளாம்பழத்திற்கு உண்டு.

தினமும் குழந்தைகளுக்கு விளாம்பழத்தைக் கொடுத்து வந்தால் நினைவாற்றல் அதி கரிக்கும்.

நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் விளாம் மரத்தின் பிசினை அடிக்கடி சாப்பிட்டு வர, பெண்களுக்கு ஏற்படும் ரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சினைகள் தீரும்.

கடினமான விளாம்பழ ஓட்டை உடைத்து, உள்ளே இருக்கும் மஞ்சள் நிற சதைப் பகுதியை கரண்டியால் எடுத்துக் கொள்ளவும். அதில் சிறிது நாட்டுச் சர்க்கரை, ஒரு சிட்டிகை உப்பு, சிறிதளவு ஏலக்காய் பொடி சேர்த்து நன்கு பிசைந்து சாப்பிடலாம்.

விளாம்பழ சதைப்பகுதியை எடுத்து, தேவையான அளவு தண்ணீர், சர்க்கரை சேர்த்து மிக்ஸியில் அரைத்து வடிகட்டி ஜூஸாகக் குடிக்கலாம்.

விளாம்பழ சதைப்பகுதியுடன், தேங்காய் துருவல், மோர், பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து பச்சடி செய்யலாம்.



விளாம்பழ சதைப்பகுதியுடன் அரிசி மாவு, வெல்லம் சேர்த்து வடை போல சுட்டும் சாப்பிடலாம். அற்புதமான பலன்களைக் கொடுக்கும் விளாம்பழத்தை கண்டால் விட்டுவிடாமல் வாங்கி உண்டு பலன் பெறுங்கள்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

10

தன் கணவனின் மனநிலையைப் புரிந்து கொண்ட ஹேமலேகை, தன் கணவனுக்கு ஞான விதைக்கான உரத்தை தெளிக்க எண்ணி ஒரு கதையின் மூலமாக அவனுக்கு, ஜீவன்,ஆத்மா, விஷயசுகம்,

அந்தகரணங்கள், ஐம்புலன்கள், உலகப்பற்று முதலியவைகளை விளக்கவிரும்பி, ராஜகுமாரரே! நான் உங்களுக்கு ஒரு கதை கூறுகின்றேன். இக்கதையினை மிகக்கவனமாக கேட்பீராக! சிறிதே மனம் சலனமடைந்து பறந்தாலும் உங்களால் இக்கதையின் உண்மைத் தன்மையினை உணர்தல் கடினமாகி விடும் என்றாள் ஹேமலேகை.

உடல் என்கின்ற ஓர் ஊரில் ஆத்மா என்ற பெயர்கொண்ட தாயார் ஒருத்தி வாழ்ந்துவந்தாள். ஆத்மாவுக்கு ஜீவன் என்கின்ற மகனொருவன் இருந்தான். அந்த ஜீவனாகிய தன்மகனை தாயாகிய ஆத்மா, இமைகளானது கண்களை காப்பதுபோல் காத்துவந்தாள், தானும் அவனும் வேறல்லன் என்றும் நினைத்திருந்தாள். தன் மகனுக்கு நல்வழிகாட்டும் நோக்கோடு புத்தி என்ற நண்பன் ஒருவனை அறிமுகப்படுத்தி வைத்தாள். புத்தியோடு ஜீவன் இருப்பதனால் நல்லது,கெட்டதை அறிந்து தன்னை உணர்ந்து கொள்ளும் ஆத்மஞான அறிவு அவனுக்கு ஏற்பட்டு விடும் என்று நம்பினாள் தாயாகிய ஆத்மா.

இப்படியாக, நாட்கள் நகர ஆரம்பித்தன. ஜீவனானவன் புத்தியோடு அதிகமான சிநேகம் கொண்டு, தன்னுடைய எல்லா விஷயங்களையும், சந்தேகங்களையும் யோசித்தறியாமல் புத்தியிடமே

கேட்க ஆரம்பித்து தன் தாயான ஆத்மாவை மறந்தான், அவளிடம் பேசுவதையும் நிறுத்தினான். ஜீவன், புத்தி சொன்ன போக்கில் அனைத்து நிகழ்வுகளையும் செயல்படுத்தலானான்.



நாராயணன்

இத்தருணத்தில் புத்தியானவன் ஜீவனை மனம் என்கின்ற தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று அங்கு புத்தியின் சகோதரியான ஆசை என்பவளை ஜீவனுக்கு அறிமுகம் செய்துவைத்தான். ஜீவனுக்கோ ஆசையை மிகவும் பிடித்துவிட்ட காரணத்தினால் நண்பனாகிய புத்தியிடம் கேட்டு தாயாகிய ஆத்மாவை மறந்து ஆசையை திருமணம் செய்துகொண்டான். அவர்கள் இருவரும் மிகவும் சந்தோஷமாக இருக்க எண்ணங்கள் என்ற மக்கள் கூட்டத்தின் மத்தியில் வாழ்ந்துவந்தனர்.

தான் எண்ணியதையெல்லாம் சாதிக்க விரும்பிய ஜீவன், ஆசை தம்பதியினர் எண்ணங்களின் மத்தியில் பேராசை என்ற பணத்தை சம்பாதித்தனர். அதனை சிந்தனை என்கின்ற வங்கிக் கணக்கில் முதலீடு செய்து அகங்காரம் என்ற வியாபாரம் ஒன்றை தொடங்கினர், இந்த அகங்காரம் என்ற வியாபாரமானது நாளுக்குநாள் விரிவடையத்தொடங்கிற்று.

அகங்காரம் என்ற வியாபாரம் விரிவடைந்தால் வங்கியாகிய

சிந்தனையில், பேராசை என்ற பணம் அதிகமாக சேரும். வியாபாரத்தை விரிவாக்கும் நோக்கோடு எண்ணங்களின் (மக்கள்) மத்தியில் அதிகமாக ஜீவன், ஆசை தம்பதியினர் பழகத்தொடங்கினர். இப்படியிருக்க, ஜீவன் ஆசைக்காகவே தன் முழுநேரத்தையும் செலவிட்டான், தாயாகிய ஆத்மாவின் நினைப்பு கொஞ்சமும் அவனக்கு தோன்றவில்லை. இந்த நேரத்தில், ஜீவனுக்கு எண்ணங்களின் மத்தியில் பொறாமை, திருட்டு, பொய் மற்றும் கோபம் என்கின்ற புதிய நண்பர்கள் வந்து சேர்ந்தனர்.

இதன்மூலமாக, ஜீவனின் நட்பு வட்டாரம் மற்றும் அகங்காரமும் நன்றாக விரிவடைந்தது. நாட்கள் செல்ல செல்ல நண்பர்களின் சூழல் மற்றும் எண்ணங்களின் தொடர்பினால் ஜீவனின் வியாபாரமாகிய அகங்காரம் மிகப் பெரிய அளவில் விரிவடைந்து பேராசையாகிய பணம் அதிகமாக சிந்தனை என்ற வங்கியில் கொட்டியது. ஜீவன் தன் மனைவி யான ஆசையை அதிகம் சந்தோஷப் படுத்தினான்.

இதுபோதாமல் அவளின் அதீத ஆசையை நிறைவேற்றும் பொருட்டு பேராசையின் துணைகொண்டு ஆடம்பரப்பொருட்களான மெய், வாய், கண், காது மற்றும் மூக்கு என்கின்ற ஐந்து பொருட்களை வாங்கி அதன் மூலமாக இன்பம், சுவை, ஒளி, ஒலி மற்றும் நாற்றம் போன்ற புதிய அனுபவங்களை பெற்று தன் மனைவியாகிய ஆசையோடு நன்றாக அனுபவித்தான்.

இவ்வாறாக, ஜீவனானவன் மேலும் மேலும் தன் சுகத்திற்காகவும், மனைவியாகிய ஆசையை திருப்திப் படுத்துவதற்காகவும் அகங்காரத்தை அதிதமாக விரிவுபடுத்தினான். வியாபாரத்தின் அமோக வளர்ச்சி யினால், பேராசையானது கொள்ளை கொள்ளையாக சிந்தனை வங்கியில் கொட்டியது. இதனால், ஜீவன் மிகப்பெரிய பணக்காரன் ஆகிவிட்டான்.

ஜீவனின் அமோக வளர்ச்சியை கண்டு பொறுக்கமுடியாமல் அவனின் புதிய நண்பர்களான பொறாமை, திருட்டு, பொய், கோபம் ஆகிய நால்வர் எப்படி யாவது இவனை கீழே இறக்கி விடவேண்டும் என்ற நோக்கத்தில், ஜீவனுக்கு இந்த நான்கு புதிய நண்பர்களும் துக்கம் என்கின்ற வேசியை அறிமுகம் செய்து வைத்தனர்.

துக்கத்திடம் சிக்கிய ஜீவன் தான் கொள்ளை கொள்ளையாக சம்பாதித்த பணத்தை வேசியிடம் கொண்டு கொட்டி மனஉளைச்சல் அடைந்து அலைக்கழிக்கப் பட்டான். இதனால், தான் விரும்பிய மனைவியை விடவும் முடியாமல், வேசியின் தொடர்பை தொடரவும் முடியாமல் அவஸ்தைப்பட்டான் ஜீவன்.

இந்த தீரா மனஉளைச்சலின் காரணமாக ஜீவனானவன் தன் பழைய நண்பனான புத்தியை மறந்தே போய்விட்டான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வேசியானவள் ஜீவனை தன் பிடியில் வைத்துக்கொண்டு, அவன் தன் பணத்தை கொண்டு வாங்கிய ஆடம்பர பொருட்களான மெய், வாய், கண், காது மற்றும் மூக்கினை ஜீவனிடமிருந்து அபகரித்து வேசி தன் இஷ்டப்படி அப்பொருட்களை பயன்படுத்த ஆரம்பித்தாள். நாளுக்கு நாள் அதிக மனஉளைச்சலுக்கு ஆளான ஜீவன் நோய்வாய்ப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக உடல் பாதிப்படைந்து விரைவில் மரணமடைந்தான்.

ஹேமலேகை, சொன்ன இக்கதையை தன் சிஷ்யனிடம் கூறிய குருதேவர், "மகனே! இக்கதையின் உட்பொருள் என்ன? உனக்கு விளங்குகின்றதா? ஆத்மாவையும், ஆத்மா கொடுத்த புத்தியையும் சரியாய் அறிந்துகொண்டு வாழத்தவறிய இந்த ஜீவன் கடைசியில் மரணம் என்ற சங்கடமான நிலைக்கு தள்ளப்படும். இதுவே, ஜீவன் தனக்கு கொடுக்கப்பட்ட புத்தியை சரியானமுறையில் பயன்படுத்தி விசாரம் செய்து, தனக்கு நன்மையை மட்டுமே நினைத்த ஆத்மாவை அறிய நினைத்து வாழ்ந்திருந்தால் மரணமில்லா பேரின்பநிலையை அடைந்திருக்கலாம் என்பதாகும்.



"மகனே ஒன்றை புரிந்துகொள்! சத்வகுணமே புத்தியின் நிலை. ஆனால், புத்தியிடம் உள்ள அறியாமையினால், ஜீவன் ஆத்மாவிடம் இருந்து பிரிக்கப் பட்டு, இந்த அறியாமையின் ஆளுமை காரணத்தினால் பல விதமான எண்ணக்கூட்டத்தில் சிக்கித்தவித்து ஆசை, மோகத்தால் ஆட்டுவிக்கப்பட்டு எப்படிபட்ட நிலைக்கு இறுதியில் தள்ளப்பட்டது என்பதை பார்! மனமே நம் நண்பனும், எதிரியும் ஆகும்.

எவனொருவன் மனதிற்கு தவம், தியானம் என்ற கடிவாளம் பூட்டி பிரயாணத்தை ஆரம்பிக்கிறானோ இறுதியில் அவன் ஆத்மஞானம் என்கின்ற சரியான இலக்கை அடைந்து மௌனம் என்ற பேரானந்த வீட்டில் வாழ்கின்றான். மனிதனிடமுள்ள இந்த ஆசை பலமடைய பலமடைய புத்தி தடுமாற ஆரம்பிக்கிறது, முடிவில் ஜீவன் மூடத்தனமான செயல்களை மட்டுமே செய்து



தானே தன் துக்கத்திற்கு காரணன் ஆகின்றான்"என்று கூறினார்.

இந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும் "அந்தக்கரணம்" என்றழைக்கப் படுகின்றது. மனம் தன் கற்பனை சக்தியினால் அவைகளை அனுபவிக்க ஏதுவாக மெய், வாய், கண், காது, மூக்கு என்ற ஐந்து ஞானேந்திரி யங்களினால் உலகவிஷயங்களை தொடர்பு கொண்டு அதன்மூலமாக, இன்பம்,சுவை,ஒளி,ஒலி, நாற்றம் போன்ற அனுபவங்களை அனுபவிக்கின்றது. இவ்வாறாக புலன்களின் வாயிலாக அனுபவித்த விஷயசுகங்களை சிந்தித்து அவற்றில் சிலவற்றை பதிவுகளாக சிந்தையில் பதித்துக்கொள்கின்றது.

பின்னர் அந்தச்சில பதிவுகளை மீண்டும் மீண்டும் நினைவூட்டி விஷயசுகங்களை அனுபவிக்க நினைக்கிறான் ஜீவன். அதன்மூலம் இன்பம் அடையவிழைகிறான். ஆனால், அவனுக்கு எவ்வளவு முறை அனுபவித்தபோதும் ஆசைகள் நிறைவேறி அடங்காமல் மனமானது அலைக்கழிக்கப் படுகின்றது. இவ்வாறு, விஷயசுகங்களின் பால் அலைக்கழிப்பட்டு ஆசைகள் நிறை வேறாமல் வெறுப்பிலும், கோபத்திலும் இந்த ஜீவன் கொந்தளிக்கின்றது. இதனால் மனமானது துக்கத்திற்கு ஆளாகி அது புத்தியை பாதிக்கிறது.

இங்கு புத்திக்கு விசாரம் இல்லாத காரணத்தினால் ஜீவனுக்கு நன்மை புரியமுடியவில்லை. விசாரம் இல்லாத புத்தியானது தன்னுள் அழுக்குளை சேர்த்துக்கொண்டு ஜீவனை மாசுபடுத்துகின்றது. இது ஜீவனின் அறியாமையே ஆகும். ஜீவன் தன்னுடைய இணைபிரியாத ஆத்மாவின் தொடர்பினிலிருந்து விலகுவதால் மற்ற அந்தக்கரணம், ஞானேந்திரியம், மனம் ஆகிய அனைத்தும் அழுக்கான புத்தியின் சொற்படி விஷயசுகங்களிலேயே இன்பம் காணமுற்பட்டு முடியாமல் உடம்பையே "நான்" என்றெண்ணி, உலகத்தையும், சுற்றத்தையும் "தன்னுடையது" என்று கருதி இறுதியில் ஆத்மாவை உணராமலேயே ஜீவனின் வாழ்க்கை முடிந்துவிடுகிறது.

பிம்பங்கள் எப்படி கண்ணாடிக்கு அந்நியமில்லையோ, அதுபோல தோற்றங்கள் அனைத்துமே ஆத்மாவின் பிரதிபலிப்பேயாகும். இந்த ஞானம் ஜீவனுக்கு உண்டாகிவிட்டால், அவனுக்கு துக்கம் என்பதே கிடையாது. புத்தியின் சேர்க்கையினால், ஜீவன் சுக, துக்கத்தில் இருப்பதாக தோன்றினாலும் அதுவும் ஆத்மாவின் பிரதிபலிப்பே என்பதே உண்மை, அது பரமாத்மாவேயன்றி வேறில்லை என்பது புரிந்தால் ஜீவாத்மா – பரமாத்மா பேதமானது மறையும்.

இவ்வாறாக, பலகாலம் அவதிப்பட்ட புத்தியானது விசாரத்தின் மூலம் விவேகமடைந்து வைராக்கிய மனதைப்பெற்று, ஆசைகளை அடக்கி, மோகத்தை கடந்து, எண்ணங்கள்யாவும் ஒடுக்கப்பட்ட நிலையில், ஜீவனானது ஆத்மாவோடு தொடர்பை பலப்படுத்திக் கொண்டு பரமானந்தத்தை அனுபவிக்கும் எனவே, பந்தம், துக்கம், மகிழ்ச்சி, முக்தி போன்ற அனைத்தும் புத்தியின் அறியாமையேயாகும். உண்மையில் ஆத்மாவின் பிரதிபலிப்பே ஜீவாத்மா ஆகும். அதற்கு, பிறப்போ, இறப்போ, மகிழ்ச்சியோ, துக்கமோ இல்லை.

இவையாவும், புத்தியிடம் உள்ள அறியாமையின் விளையாட்டேயாகும். இவ்வாறு, ஹேமலேகை கூறிமுடித்தாள்.

ஆன்மீக சேவை

ஆன்மீகச்சேவை செய்யும்போது உங்கள் மனதில் அமைதி இல்லை என்றால், நீங்கள் அதை முறையாகச்செய்யவில்லை என்று அர்த்தம். நீங்கள் செய்யும் சேவை உங்களுக்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் கொடுத்திருக்க வேண்டும். செய்யும் சேவை எதுவென்றாலும் செய்வதில் திருப்தி வேண்டும். மேலும் மேலும் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் வர வேண்டும்.



சேவை செய்யும் போது மெய்மறந்து செய்ய வேண்டும். சேவை சுமையாகத் தெரியாமல் ஆனந்தமாக தோன்ற வேண்டும். சுமையாகத் தெரிந்தால், கூலிக்கு வேலை செய்வதைப் போன்றதாகும். செய்யும் சேவையில் எதையும் எதிர்பார்த்து செய்யக்கூடாது. நன்றியை எதிர்பார்பதுகூட பலனை எதிர்பார்ப்பதாகும்.

பலனை கருதி செய்யும் சேவை, சேவையே அல்ல. கூலி வேலை கூலிக்காகச் செய்யப்படுவது போன்று சேவை சேவைக்காக செய்யப்பட வேண்டும். அது செய்யப்படும்போதே மறக்கப்பட்டுவிட வேண்டும். அதுவே உண்மையான ஆன்மீக சேவையாகும்



திருமண வாழ்த்து

இறைவனால் நிச்சயிக்கப்பட்டு
மகான்களால்
ஆசீர்வதிக்கப்பட்டு நிகழும்

20.02.26

வெள்ளிக்கிழமை

அன்று

திருமண பந்தத்தில்
இணையும்



S.R. ஞானேஷ்வர்
S.அஷ்விதா

ஆகியோர் பகவான் சாயிநாதரின்
ஆசியோடு நீள் ஆயுள், நிறை
செல்வம், வான்புகழ், மெய்ஞானம்
பெற்று வாழ்க வளமுடன் என்று
வாழ்த்துகின்றோம்.

நேசமுடன்

G. ஸ்ரீநிவாஸ் (ஷ்யாம்)
N. ராதாமணி
வேளச்சேரி, சென்னை

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும்

"சாய் சங்கமம்"

15.2.2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணியில் இருந்து மதியம் 2 மணிவரை

சாயி பஜன், குத்துவிளக்கு பூஜை, ஜோதி தியானம், பிரார்த்தனை, ஹோமம், அன்னதானம், சத்சங்கம்



இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை.
இம்மாத மாபெரும் ஹோமம்

ஸ்ரீ மகாலட்சுமி ஹயக்கிரீவர் ஹோமம்

(கல்வி, நினைவாற்றல், ஞானம் மற்றும் கற்றல் திறன், செல்வம், அதிர்ஷ்டம், நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.)

ஹோம காணிக்கை: ரூ.500/-
(நபர் ஒருவருக்கு)

குறிப்பு: ஹோமத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஹோமப் பொருட்கள் அன்னதானத்திற்கு காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விபரங்களுக்கு :

திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்
போன்: 63851 29372

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"



பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்


புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

Scan to pay with any UPI app


தொடர்புக்கு: 9941816692.



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

'இலஞ்சி சித்தர்' ஓம் ஸ்ரீ பேப்பர் சுவாமிகள்



திருக்குற்றாலத்தை அடுத்த இலஞ்சி என்னும் ஊரில் பேப்பர் சுவாமிகள் தமது அருளாட்சியைத் தொடங்கினார்கள். சுவாமிகள் எப்பொழுதும் தமது கைகளில் கீழே கிழிந்து கிடக்கும் தாள்களை எடுத்து அவற்றை ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்வார். பின்னர் அவற்றைப் பார்த்து வாசிப்பார்.

வாசித்தவை மறுநாள் நாளிதழ்களில் தலைப்புச் செய்திகளாக வரும். இவற்றைக் கண்ட மக்கள் வியப்படைந்து சுவாமிகளை பேப்பர் சுவாமிகள் என்று அழைத்தனர். "சுவாமிகள் சுமார் ஐந்தரை அடி உயரம் இருப்பார். ஜிப்பாவும் வேஷ்டியும் அணிந்து கால்களில் பூட்ஸ் அணிந்திருப்பார்"

சுவாமிகள் இலஞ்சியில் அருளாட்சி செய்த காலத்தில் ஓரிடத்தில் நிலையாக இருந்தது இல்லை. சுவாமிகள் எங்கிருப்பார், எப்பொழுது வருவார், எங்கு போவார் என்று தெரியாது. இலஞ்சியில் உள்ள பிள்ளையார் கோயில்,குன்னக்குடி பிள்ளையார் கோயில், கீழ் இலஞ்சியில் உள்ள நாராயணசுவாமி கோயில் போன்ற இடங்களில் சுவாமிகள் காட்சியளிப்பார்கள். பேப்பர் சுவாமிகள் வைத்தியத்திலும் சிறந்து விளங்கினார். கீழ்இலஞ்சி இராமசாமி, திருநெல்வேலி முத்தையா பிள்ளை போன்றோர் சுவாமிகளிடம் மருத்துவம் கற்றனர். இவர்களுள் முத்தையா பிள்ளையிடம் ஜி.டி.நாயுடு, நீதிபதி பலராமையா போன்றோர் மருத்துவம் பயின்று இருக்கின்றனர்.

1946–ஆம் ஆண்டு முதல் 1950–ஆம் ஆண்டு வரை இளையரசனேந்தலில் தவத்தை மேற்கொண்ட சுவாமிகள் 1950–ஆம் ஆண்டு முதல் 1956–ஆம் ஆண்டு வரை மௌன தவத்தில் வீற்றிருந்தார்கள். பேப்பர் சுவாமிகள் பல சித்தர்களோடு தொடர்பு கொண்டவராகவே வாழ்ந்துள்ளார்.

அம்பலவாண சுவாமிகள் என்ற

யோகி ஸ்ரீராம் பாபா

சிவகிரி சுவாமிகள், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், பேப்பர் சுவாமிகள் தவமேற்றும் போதெல்லாம் அவரை காண வந்து செல்வார் என்று அவரது பக்தர்கள் கூறுகிறார்கள்.

ஒரு காலகட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையே மழையின்றி வறண்டது. குளங்களில் தண்ணீர் இல்லை. இதனால் விவசாயம் பொய்த்தது. மழை இன்றி வறண்டால் விவசாயிகள் பரிதவித்தனர்.

விவசாயிகள் சுவாமியிடம் ஓடோடி வந்து, 'சுவாமி! வயக்காட்டுல நாத்து நட்டாச்சு.. ஆனால் மழையும் இல்லை தண்ணியும் இல்லை, நீங்கதான் அருள் புரியனும்' என்றனர்.

சுவாமி அவர்களை மேலும் கீழுமாக பார்த்தார்.'மழை தண்ணி வரும்டா, பாத பூஜை நடத்தி, ஊர்ல பட்டண பிரவேசம் சுத்தி வாங்கடா, மழை பெய்யும்' என்றவர்,

'இடி இடிக்க மழை பெய்ய இடும்பன் குளம் தத்தளிக்க குடை பிடிச்சு வருவேன் குடமயிலே தூங்கிடாதே.' என்ற ஒரு பாடலையும் பாடினார். ஊர் மக்கள் இந்தப் பூஜையை யாரை வைத்து செய்வது? சுவாமி என்று கேட்டனர். அதற்கு பேப்பர் சுவாமிகள், 'பங்களாக்காரனை வைத்து செய்யுங்கள்' என்றார். அவர் குறிப்பிட்டது, இளையரசனேந்தல் ஜமீன் நரசிம்ம அப்பாசாமி. தகவல் ஜமீன்தாருக்கு தெரிவிக்கப்பட்டது. மழைக்காக எதுவும் செய்ய தயார்



என்ற நிலையில் ஓடோடி வந்தார் ஜமீன்தார்.

தன்னை வணங்கி நின்ற ஜமீன்தாரை மேலும் கீழுமாக பார்த்த பேப்பர் சுவாமிகள், 'நீ எனக்கு பாத பூஜை செய்யப் போகிறாயா? இது லேசான வண்டி கிடையாதுடா. இந்த வண்டி முதலில் கடலூரில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் சமாதி ஆகியிருக்கு. இரண்டாவதாக கரூருக்குப் பக்கத்தில் உள்ள



நெஞ்சில் சமாதி ஆகியிருக்கு' என்றார். பேப்பர் சுவாமிகள் ஏற்கனவே இரு இடங்களில் ஜீவ சமாதி அடைந்து, மூன்றாவதாக இங்கே அவதரித்திருக்கிறார் என்பதை அறிந்து மக்கள் பலரும் வியந்து நின்றனர்.

தொடர்ந்து பேப்பர் சுவாமிகள், 'இன்று மட்டும் நீ பூஜை நடத்தினால் போதாது, 21 வருடம் தொடர்ந்து பாத பூஜை நடத்தவேண்டும். முடியுமா?' எனக் கேட்டார்.

'நடத்துகிறேன் சுவாமி' என நரசிம்ம அப்பாசாமி ஜமீன்தார் ஒத்துக்கொண்டார்.

அதன் பிறகு பட்டணப் பிரவேசத்துக்கு தயாரானார்கள். 6.4.1936 அன்று சித்ரா பவுர்ணமி. விவசாயிகள் ஒன்று கூடினர். பேப்பர் சுவாமிகளை ஊர்வலமாக அழைத்து வந்தனர்.ஜமீன்தார் சுவாமிக்கு பாத பூஜையை நடத்தினார். பின்னர் சுவாமிகளை அலங்கரிக்கப்பட்ட காரில் அமரச் செய்து இலஞ்சி ஊரைச்சுற்றி பட்டணப்பிரவேசம் கூட்டி வந்தனர்.

வானம் எப்போதும் போலவே காணப்பட்டது. கரும்மேகம் கூடவில்லை. மழை வருமா? பலருக்கு சந்தேகம் எழுந்து விட்டது. ஆனால் விவசாயிகளுக்கு சித்தர் பெரும் மகனார் மீது அளவில்லாத பக்தியும், நம்பிக் கையும் இருந்தது. ஊர்வலம் ஜமீன்தாரின் பங்களாவின் தலைவாசலுக்குச் சென்றபோது திடீரென மிகப்பெரும் ஓசையுடன் கூடிய இடியோடும், மின்னலோடும் பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது. மறுநாள் காலையில் இலஞ் சியை சுற்றியுள்ள அனைத்து குளங்களும் தண்ணீரால் தளும்பிக் காணப்பட்டன. இதனால் இலஞ்சி மக்களுக்கு பேப்பர் சுவாமிகள் மீது அளவற்ற அன்பும் பக்தியும் ஏற்பட்டது.

இளையரசனேந்தலின் ஜமீ னில் மூத்தவர் சங்கர நாராயண அப்பாசாமி ஆவார். இளையவர் நரசிம்ம அப்பாசாமி. இருவருக்குமே ஆண் வாரிசுகள் இல்லை.

இலஞ்சியில் சுவாமியை நேரில் பார்த்து வணங்கினார்கள் ஜமீன்தார்கள்.

அவர்களை எதிர்பார்த்தது போலவே சுவாமிகள் சிரித்துக் கொண்டே பேச ஆரம்பித்தார். அவர்களைப் பார்த்த பேப்பர் சுவாமி, 'என்னப்பா, ஏதோ எதிர்பார்த்து வந்திருக்கிற போல' என்று கேட்டார்.

மூத்த ஜமீன்தார் கண்கலங்க நின்றார். அவரால் பேச முடிய வில்லை. நா தழுதழுத்தது. 'சுவாமி அண்ணனுக்கு ஆண் வாரிசு இல்லை. எனக்கும் ஆண் வாரிசு இல்லை. ஜமீன் அரண்மனையில் ஆண் வாரிசு இல்லன்னா, எவ்வளவு கஷ்டமுன்னு உங்களுக்கு தெரியும்' இளையவர்தான் பேசினார்.

சிரித்துக்கொண்டே சுவாமிகள், இரண்டு கடுக்காய்களை எடுத் தார். ஜமீன்தார் கைகளில் கொடுத்தார். 'இங்க பாருப்பா, உனக்கு சிம்ம லக்னத்தில இரண்டு

ஆண் குழந்தைகள் பிறக்கும்' என்றார். சந்தோஷமாக நரசிம்ம அப்பாசாமி அதை கையில் பெற்றுக்கொண்டவர், 'சுவாமி அண்ணனுக்கு' என்று இழுத்தார்.

சுவாமி சிரித்துவிட்டு, 'உனக்குத் தான் இரண்டு ஆண் குழந்தை கிடைக்கும் டா' என்றார். நரசிம்ம அப்பாசாமிக்கு பெண் குழந்தை பிறந்து, சுமார் 16 வருடங்கள் கடந்து விட்டது. பிறகு எப்படி குழந்தை பிறக்கும் என்று பலரும் கேள்வி கேட்டனர்.

ஆனால் ஜமீன்தார் மட்டும் நம்பிக்கையோடு இருந்தார். காலங்கள் கடந்தன. சுவாமிகள் திருவாக்கின் படியே இளைய ஜமீன்தார் நரசிம்ம அப்பாசாமிக்கு சிம்ம லக்னத்தில் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

சந்தோஷத்தின் உச்சிக்கே சென்று விட்டார் ஜமீன்தார்.அதன் பிறகு சுவாமிகளுக்கும் ஜமீன்தார் களுக்கும் மிகவும் நெருக்கம் ஏற்பட்டது. 1941–ம் ஆண்டு. ஜமீன்தார் தனது மகள் திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்திருந்தார். அதற்காக பேப்பர் சுவாமியை அழைத்துவர காரில் இலஞ்சிக்கு வந்தார்.

பேப்பர் சுவாமி இலஞ்சி ஐ.கே. எஸ். பிள்ளை என்பவர் வீட்டில் பூஜை செய்து கொண்டிருந்தார். ஜமீன்தார், 'சுவாமி! எனது மகள் திருமணத்தை நடத்தி வைக்க நீங்கள் வரவேண்டும்' என்றார். சுவாமி சிரித்துக்கொண்டே 'சரி, நாளைக்கு காலையில வாரேன். நீ குன்னக்குடி பிள்ளையார் கோவிலுக்கு வா. நான் அங்கு உனக்காகக் காத்திருக்கேன்' என்றார்.

ஜமீன்தாருக்கு சந்தோஷம். ஐ.கே.எஸ். பிள்ளைக்கோ வருத்தம். 'நமது வீட்டு விசேஷத்தை விட்டு விட்டு சுவாமி கிளம்புவேன் என் கிறாரே" இரண்டு பேர் முகத்தினை யும் பேப்பர் சுவாமி கவனித்தார்.

மறுநாள் காருடன் வந்தார் ஜமீன்தார். அங்கிருந்த சுவாமியை காரில் ஏற்றிக்கொண்டு இளையரச னேந்தல் நோக்கி விரைந்தார். இதைக் கேள்விப்பட்ட ஐ.கே. எஸ்.பிள்ளை. 'தனக்கு தெரியாமல் தனது வீட்டை விட்டு சுவாமி வெளியே சென்று இருக்க முடியாதே. எப்படி நம் வீட்டை விட்டு சுவாமி கிளம்பினார்' என பலவித யோசனையுடன் தனது வீட்டில் பேப்பர் சுவாமி தங்கி இருந்த அறைக்கு சென்றார்.

அங்கே சுவாமி பூஜை செய்ய ஆயத்தமாக அனைத்து வேலை களையும் செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்து அதிர்ந்து விட்டார் ஐ.கே.எஸ்.பிள்ளை. 'அப்படி என்றால் ஜமீன்தார் அழைத்து கொண்டு சென்றது யாரை?' என்று குழம்பிப் போனார்.

உடனடியாக குன்னக்குடி பிள்ளையார் கோவிலுக்கு ஒருவரை அனுப்பி, ஜமீன்தாருடன் சுவாமி சென்றாரா? என்று விசாரித்து வரச் சொன்னார். அந்த நபர் அங்கு சென்றுவிட்டு திரும்பி வந்து 'சுவாமி, குன்னக்குடி பிள்ளையார் கோவிலில் பூஜை செய்து கொண்டி ருக்கிறார்' என்றார்.



அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி யாக இருக்கிறதே என்று நினைத்த பிள்ளை, வீட்டிற்குள் நுழைந்தபோது, 'என்ன பிள்ளை அதிர்ச்சியா இருக்கா?' என சிரித்துக்கொண்டே கேட்டார், பேப்பர் சுவாமி. அதே நேரத்தில் பிள்ளை வீட்டில் இருந்த போன் அலறியது.

அதிர்ச்சியில் இருந்து மீளாம லேயே போனை எடுத்தார் பிள்ளை. 'பிள்ளை மன்னிச்சிடுங்க! உங்க வீட்டு நிகழ்ச்சிக்கு இடையி லேயே பேப்பர் சுவாமியை எனது மகள் திருமணத்துக்கு கூட்டிட்டு வந்துட்டேன்' என்றார் ஜமீன்தார்.'சுவாமி இளையரச னேந்தலிலுமா? அப்படியென்றால் மூன்று இடத்தில் சுவாமியா?' என்று அதிர்ந்து போய் விட்டார் பிள்ளை. அந்த காலத்தில் டிரங்கால் புக் செய்து பேசவேண்டும். அல்லது ஏதாவது டாக்ஸி புக் செய்து அதன் மூலம் சென்று தான் மற்ற ஊரைப்பற்றி அறியமுடியும். இலஞ் சியில் இருந்து இளையரசனேந்தல் பல கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

செய்தி அலைவரிசை கூட ஓரிடத்தில் இருந்து மறு இடத் துக்கு செல்ல நேரம் பிடிக்கும். அப்படியிருக்கும் போது ஒரே நேரத் தில் மூன்று இடத்தில் இருந்த சித்தர் மிகவும் பெருமைக்குரியவர்தானே. இந்த செய்தி ஊரெங்கும் பரவியது. பக்கத்தில் உள்ள கிராம மக்கள் மட்டுல்லாமல் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டமே அதிசயமாய் பேசியது. அந்தக் காலத்தில் சுதேச மித்திரன் பத்திரிகையில் இந்த நிகழ்வை செய்தியாக வெளியிட்டு இருந்தார்கள்.

1946–ம் ஆண்டு டிசம்பர் மாதம் பேப்பர் சுவாமிகளை இளையரசனேந்தல் அரண் மனைக்கே கூட்டி வந்து விட்டனர் ஜமீன்தார்கள். அங்கேயும் அவரது அற்புத செயல்கள் தொடர்ந்தது. அரண்மனையில் பணியாற்றியவர் முத்தையா பிள்ளை மகன் வையாபுரி பிள்ளை. இவர் 1950–ம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி தேர்வு எழுதியிருந்தார்.

அவருடைய தேர்வை பல நாளுக்கு முன்பே கணித்தார் பேப்பர் சுவாமி. பேப்பர் சுவாமி யிடம் முத்தையா பிள்ளை 'என் மகன் தேர்வில் வெற்றி பெற்று


விடுவானா?' என்று கேட்டார். உடனே பேப்பர் சுவாமி, அங்கே கிடந்த ஒரு பழைய பேப்பரை எடுத்துக் காட்டினார். அதில் 1949–ல் நடந்த ஆசிரியர் பயிற்சி தேர்வு முடிவு வெளியாகியிருந்தது. அந்த பேப்பரில் சுவாமி குறிப்பிட்டு காட்டிய இடத்தில் வையாபுரி பிள்ளையின் பதிவெண் இருந்தது.

முத்தையா பிள்ளைக்கு கொஞ்சம் சந்தேகம் தான். இது 1949–ம் ஆண்டு பேப்பர் அல்லவா?. 'இந்த பதிவெண்ணில் அந்த வருடம் தேர்வானவர் அல்லவா இருப்பார்' என்று நினைத்தார். தேர்வு முடிவு வந்த போது, அவர் காட்டிய படியே பதிவெண், அதே பக்கத்தில் அதே பாராவில் வெளியாகி இருந்தது.

ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்று விட்டார் முத்தையா பிள்ளை. அதன் பின் பேப்பர் சுவாமியின் தீவிர பக்தராக மாறி விட்டனர், தந்தையும் மகனும்.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் தமது ஞானப்பணி நிறைவடைந்ததை உணர்ந்த சுவாமிகள் தாம் ஜீவசமாதி ஆகப் போவதை ஜமீன் குடும்பத்தார்க்கு உணர்த்தினார்கள். 14.05.1956–ஆம் ஆண்டு சித்திரை மாதம் 31–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 01.30 மணியளவில் திருவாதிரை நட்சத்திரத்தில் சுவாமிகள் பரிபூரணமடைந்தார்கள்.

சுவாமியின் சீடர்கள் அமர்ந்து தியானம் செய்வதற்கு ஏற்ப கோவில் கட்டமைக்கப்பட்டுள்ளது. தற்போதும் பேப்பர் சுவாமி




தனது சீடர்களையும், தன்னையும் நம்பி வருவோருக்கு அருளாசி வழங்கிக்கொண்டிருக்கிறார். ஜீவ சமாதி அடைந்த பிறகும் கூட இளையரசனேந்தல் ஜமீனில் பல அற்புதங்களை பேப்பர் சுவாமி செய்து வருகிறார்.

கோயில்பட்டியிலிருந்து திருவேங்கடம் இராஜபாளையம் செல்லும் வழியில் 10 கி.மீ. தூரத்தில் இளையசனேந்தல் என்னும் ஊரில் உள்ள ஜமீன் அரண்மனையின் ஒரு பகுதியில் பேப்பர் சுவாமிகளின் அதிஷ்டானக் கோயில் உள்ளது. சென்ற 5.5.2025 அன்று சுவாமிகளின் 69 வது குரு பூஜை ஜமீன்தார்களின் வாரிதாரர்களால் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. ●

அகந்தை

நாம் இறைவனின் உண்மையான தன்மையை அறிந்து கொண்டால், அவன் நம் அகந்தையை அழிக்க உதவுவான். அகந்தை என்பது ஆன்மாவை நம்பி இருக்கின்றது. நான் என்பது ஆன்மாவை நம்பியிருப்பதால் நான் சுதந்திரமானவன் இல்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.



ஆயினும் நம்மை இறைவனிடத்தில் சமர்ப்பித்து விட்டால், நாம் சுதந்திரம் பெற்று விடுவோம். ஏனெனில் நமது எல்லா செயலுக்குண்டான பொறுப்பையும் இறைவனே ஏற்றுக் கொள்கின்றான். அப்பொழுது அகந்தை நான் செய்கின்றேன், என்பதற்குப் பதிலாக, நான் கருவி, என் மூலமாக இறைவன் செய்கின்றான் என்று சொல்லும்.

எனவே இறைவனே ஒவ்வொன்றையும் செய்கின்றான். நீங்கள் செய்வதற்கு ஒன்றும் இல்லை. உங்களுக்கு எந்த பொறுப்பும் இல்லை. உங்களது ஒரே பொறுப்பு இறைவனிடம் சரணாகதி அடைவதே! உங்களது எல்லா செயல்களையும் இறைவனை செய்யவிடுவதே உங்களது அகந்தையை அழிக்கும் ஒரே வழியாகும். ●

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.



1

ஸ்ரீ சங்கர் மகராஜ் சரித்திரம்

ஸ்ரீ குருப்யோ நம, சாயி மகராஜ் குருவைத் தேடி வாசகர்களுக்கு என் அன்பான வணக்கங்கள். பிரபஞ்ச பேராற்றலின் அதீத கருணையினாலும், குரு யோகி ஸ்ரீராம் பாபாவின் அனுகிரகத்தினாலும், இந்த தொடரின் மூலம் உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பூர்வஜென்ம புண்ணியங்களினாலும், மகான்களின்

அனுக்கிரகத்தினாலும் ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபரைப் பற்றியும், அக்கல்கோட் மஹராஜ் ஸ்வாமி சமர்த்தரைப் பற்றியும் ஏற்கனவே என் மூலம் புத்தகங்கள் உருவாகியுள்ளன. அக்கல்கோட் மஹராஜ் புத்தகம் எழுதும் சமயத்தில் ஸ்ரீ சங்கர் மஹராஜ் என்னும் மகானைப் பற்றி கேள்விப்பட்டேன். அவரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அப்போது எழுந்தாலும் அதற்கான நேரமும் சூழலும் அமையவில்லை.

சமீபத்தில் திரு.பாலமுருகன் என்னும் சாயி பக்தருடன் உரையாடிக் கொண்டிருந்த போது அவர் என்னை ஸ்ரீ சங்கர் மஹராஜ் பற்றி தமிழில் புத்தகம் எழுதுமாறு வலியுறுத்தினார். புத்தகம் அச்சிடுவதில் ஏற்கனவே எனக்கு ஏற்பட்ட பல இன்னல் அனுபவங்களால் அதை தவிர்த்துவிட்டு யூடியூப் மூலமாக காணொளியாக வெயிட்டேன். அதன் எழுத்து வடிவம்தான் இப்போது நீங்கள் படித்துக் கொண்டிருப்பது.

இந்த பணிக்கு விதையிட்ட அக்கல்கோட் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தரையும், என் குரு யோகி ஸ்ரீராம் பாபாவையும் என் குலதெய்வத்தையும் நமஸ்கரித்து வணங்குகிறேன். எனக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என் கணவர் குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் என் தம்பிக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். குரு மண்டலத்தில் வீற்றருக்கும் அனைத்து குருமகா சக்திகளுக்கும் இந்த பணி சமர்ப்பணம்.

ஸ்ரீ சங்கர் மஹராஜ் என்னும்

மாதங்கி பாலாஜி

மகானின் சரித்திரம் மற்ற மகான்களின் சரித்திரத்தை விட சற்று வித்தியாசமானது அவர் தன் சீடர்களுக்கு ஞானம் ஊட்டுவதற்காக செய்த செயல்கள் அனைத்தும் சிந்திக்க தூண்டுபவை.

இதை படிப்பவர்கள் அனைவரும் ஸ்ரீ சங்கர் மஹராஜ் செய்த லீலைகளை ஆச்சரியம் என்று மட்டும் பார்க்காமல், அந்த லீலை மூலம் மகராஜ் நமக்கு என்ன உணர்த்துகிறார் என்பதை சிந்தித்து செயல்பட்டு மஹாராஜின் பரிபூர்ண அனுக்கிரகம் பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன்.

பாரதம் மிகவும் புண்ணியம் வாய்ந்த பூமி. ஏனென்றால் இங்கு தான் பல மகான்கள் தோன்றி மக்களை வழிநடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஏன் பாரதத்தில் மட்டும் இவ்வாறு திகழ வேண்டும் என்று பார்த்தால், இங்கு மட்டும்தான் நாகரிகம் தோன்றியதற்கான பல ஆதாரங்களும், அவற்றை வலியுறுத்தும் வகையில் இதிகாசப் புராண கதைகள் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அதனால்தான் 'பாரத பூமி மகான்களின் பூமி' என்று அழைக்கப்படுகிறது.

பல்வேறு காலகட்டங்களில் தெய்வீகம் மனித உருவம் எடுத்து வந்து குருமார்களாக அவதரித்து மக்கள் அனைவரையும் உய்வித்து கொண்டிருப்பது இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அவ்வாறு தோன்றிய குருமார்களில் ஒருவர்தான்

ஸ்ரீ சங்கர் மஹராஜ்! மஹாராஷ்டிர மாநிலத்தில் புனே என்னும் ஊரில் சமாதிநிலை எய்தியிருக்கும் சங்கர் மஹராஜின் லீலைகளைத்தான் நாம் அறிந்து கொள்ளப் போகிறோம்.

அத்தியாயம்: 1

ஸ்ரீ சங்கர் மகராஜ் பற்றி பலவித மான கதைகள் உலாவுகின்றன. அவரே சில சமயம் தன் வயதையும், தான் இந்தெந்த இடங்களில் இவ்வாறு அழைக்கப்பட்டேன் என்றும் கூறுகிறார். ஆனால் அவை முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது.


தன்னை ஆன்மா என்று உணர்ந்து கொண்ட ஒருவரால் தன் உடலின் வயதை சரியாகக் கூற முடி யுமோ! மேலும் ஒரே நேரத்தில் பல உருவங்களில் தோன்றுபவர்களுக்கு வயதும் உடலும் ஒரு பொருட்டாக இருக்கமுடியுமா? அதனால் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் இவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் நதிமூலம் ரிஷிமூலம் அறியமுடியாது அல்லவா? மகான்களையும் அற்புதங்களையும் அனுபவிக்கத்தான் முடியும் ஆராய முடியாது. அப்படிப்பட்ட அற்புதம் நிறைந்த மகான்களில் ஒருவர்தான் ஸ்ரீ சங்கர் மஹராஜ்!

ஸ்ரீ சங்கர் மஹராஜ் அவதூத நிலையில் வாழ்ந்த ஒரு மகான். அவதூத நிலை என்பது ஆன்மீகத் தில் மிகவும் உயர்ந்த ஒரு நிலை. உலகப் பற்றுகளைத் துறந்து, எப்போதும் உள்ளார்ந்த ஆன்மிக அனுபவத்தில் மூழ்கியிருப்பதுதான் அவதூத நிலை. அவருடைய சமாதி கோவில் மஹாராஷ்டிர மாநிலம் புனே–சதாரா சாலையில் அமைந்துள்ளது.

அவர் எந்த வருடம் பிறந்தார் என்பதை யாராலும் சரியாகக் கணிக்க முடியவில்லை. இருப்பினும் அவர் சமாதி அடையும்போது அவரின் வயது 150 ஆக இருக்கலாம் என்று ஊகிக்கின்றனர். ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் வளர்பிறை அஷ்டமி அன்று அவருடைய பிரகடன தினத்தை அனுஷ்டிக்கின்றனர். அவர் மராட்டிய மாதமான வைசாக மாதம் அஷ்டமி திதியில் சமாதி அடைந்தார். அதாவது 1947 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதி சமாதி அடைந்தார்.

மகராஜ் புனேவில் இப்போது நிரந்தரமாக சமாதி அடைந்திருந் தாலும் அவர் ஸ்தூல ரூபத்தில் இருந்த போது ஒரே இடத்தில் தங்கியிருந்தது இல்லை. அவர் மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள அஹமதுநகர், அக்லுஜ் என்னும் ஊரில் உள்ள சக்கரை ஆலை, மும்பை, சோலாப்பூர், புனே, நாசிக் போன்ற இடங்களில் தன் பக்தர் களின் வீட்டில் தங்கியிருப்பார்.

மேலும் தத்தாத்ரேயரின் அவதாரமான நரசிம்ம சரஸ்வதி வாழ்ந்த ஸ்தலங்களான ஔதும்பார், நரசோபாவாடி, கானகாபூர் போன்ற இடங்களுக்கும், ரேணுகா தேவியின் இடமான மாஹூருக்கும், ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீசைலத்துக்கும் சென்றுள்ளார். இந்தியா மட்டுமல்லாமல் அவர் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளார் என்றும் அவர் அங்கு வேறு பெயர்களில் அழைக்கப்பட்டார்



என்றும் கூறப்படுகிறது. ஆனால் அத்தகவல்கள் சரியாக நமக்கு கிடைக்கவில்லை. அவர் ஜான் என்றும் சில இஸ்லாமிய தேசங்களில் நூர் முஹம்மது என்றும் அழைக்கப்பட்டார் என்றும் கூறுகின்றனர்.

மகராஜ் பார்ப்பதற்கு ஒரு ஊனமுற்றவர் போல தோற்றம் அளிப்பார். அவரை அனைவரும் ஜனக மஹாராஜாவின் குருவான அஷ்டவக்கிரருடன் ஒப்பிடுவார்கள். மஹராஜின் உருவம் குள்ளமாக இருந்தாலும், ஆஜானுபாகுவாக இருப்பார். அதாவது அவருடைய கைகள் அவருடைய முட்டியை தொடும் அளவுக்கு நீண்டு இருக்கும். அவருடைய கண்கள் மிகவும் தீர்க்கமாகவும், பெரியதாகவும் சித்தர்களுக்கே உரிய ஊடுருவும் பார்வை கொண்டதாக இருக்கும்.

புகைப்படங்களில் கூட அவருடைய கண்களை நம்மால் தொடர்ந்து பார்க்கமுடியாத படி சக்தி வாய்ந்ததாக இருக் கும். அவர் எப்போதும் தன்னை குழந்தைத்தனமான முகபாவங் களுடன் வெளிகாட்டிக் கொள்வார். அவர் ஒரேமாதிரியான உடைகளை அணிந்து கொள்ளாமல், பலவித மான உடைகளை அணிந்து கொண்டிருப்பார். மேலும் அவர் கையில் எப்போதும் ஒரு மது பாட்டிலை வைத்துக் கொண்டு குடித்துக் கொண்டே இருப்பார். அதுமட்டுமல்லாமல், அனை வரையும் கெட்ட வார்த்தைகளால் அழைப்பார்.

இவரைப் போன்று அக்கல்கோட் மஹராஜ் மற்றும் பல சித்தர்கள் தன் பக்தர்களை கெட்ட வார்த்தைகளால் அழைப்பார்கள் என்று கேள்விப்படிருக்கிறோம் அல்லவா? ஏன் இவர்கள் இவ்வாறு கெட்ட வார்த்தைகள் பேசு கிறார்கள்? என்று யோசித்துப் பார்த்தால் இதற்கு பல விளக் கங்கள் அளிக்கலாம். பொதுவாக அனைவரும் கூறுவது என்ன வென்றால், குருமார்கள் இவ்வாறு அழைப்பதன் மூலம் நம்மிடம் உள்ள கெட்ட கர்மாக்களை அழிக்கிறார்கள் என்பர்.

அப்படியானால் கெட்ட கர்மாக்கள் ஒரு சிலரிடம் மட்டும்தான் உள்ளதா என்று யோசித்துப்பார்த்தால், இல்லை நாம் அனைவரும் நல்ல மற்றும் கெட்ட கர்மாக்களின் கலவை

தானே! அதனால் அவர்கள் நேரடியாக நம்முடைய கர்மாக்களை அழிக்கவில்லை, அவர்கள் நம்மிடம் இருக்கும் அகம்பாவத்தை மட்டும்தான் அழிக்கிறார்கள். நம்மிடம் உள்ள அகம்பாவம் அழியும் போது, நாம் இப்போது செய்யும் கர்மாக்களை சரியாக செய்கிறோம். அதன் விளைவாக நாம் ஏற்கனவே சேர்த்து வைத்திருந்த கர்மாக்களும் அழிகின்றன. இதுதான் அதன் சூட்சமம்.

மஹராஜுக்கு புகைபிடிப்பது என்றால் மிகவும் பிடிக்கும்.



அவருக்கு வாசனை திரவியம் என்றால் மிகவும் இஷ்டம். அவருக்கு இசை மிகவும் பிடிக்கும். தேநீர், கிச்சடி, வெங்காய பஜ்ஜி போன்ற பதார்த்தங்களை விரும்பி உண்ணுவார். அனைத்தையும் கடந்தவர்களுக்கு உணவு போன்ற சில விஷயங்களில் பற்று இருக்க முடியுமா? இதை கேட்டவுடன் இந்த கேள்வி நமக்குள் எழலாம்.

அவர்கள் இவை எல்லாவற்றையும் தன் பக்தர்களுக்காக மட்டும்தான் செய்தார்களே தவிர, அவர்கள் உணவு, உறக்கம், உடை, அலங்காரம், சீதோஷ்ணநிலை போன்ற புற விஷயங்களை கடந்து எப்போதும் ஆனந்தமயமான பிரம்ம நிலையிலேயே நிலைத்திருப்பர். அவர்கள் இப்படித்தான் என்று வரையறுத்துக் கூறுவது நம்முடைய சிறுமையான மனதுதான் என்பதை இங்கு அறிந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் ஒருவரை வெளிப்புறத்தில் இருந்து பார்த்து, இவர் இப்படித்தான் என்று மனித மனது ஒரு சில அபிப்பிராயங்களை வளர்த்துக் கொள்ளும் இது ஒரு வகையான அகம்பாவம் அல்லவா? அந்த அகங்காரத்தை துறந்தால் மட்டுமே நாம் மகான்களை நெருங்க முடியும் என்பதை அவர்கள் சொல்லாமல் சொல்கிறார்கள்.

கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பது தானே மெய்! ஆகவே ஆன்மீகத்தின் முதல் படி அபிப்பிராயங்களை விட்டொழித்தல். இதை முடிந்தவரை இன்றிலிருந்து பயிற்சி செய்து அனைவரும் ஆன்மீக நிலையில் முன்னேற வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன்.

ஸ்ரீ சங்கர் மஹராஜுக்கு ஜயம் உண்டாகட்டும்!!


தொடரும்

"இம்மையில் மறுமை"

இந்நிலவுலகில் இம்மையிலும் மறுமையை காண முடியுமா என்றால் பெரும்பான்மையான மக்களால் முடியவே முடியாது! சிலபேர் தம்மையே குருவாக பாவித்து ஒரு சில தகவல்களை தெரிந்துகொண்டு மறுமையை பற்றி கூறிவருகின்றனர். அது முழுமையாகுமா என்றால் ஆகாது. ஏனெனில் அவர்கள் தம்மைத்தாமே குருவாக நியமித்துக் கொண்ட அந்தியத குருவாவார்கள்.

ஒரு சிலர் மட்டுமே இறை வனால் நியமிக்கப்பட்டு இந்நில வுலகில் நியதகுருவாக செயலாற்றி மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு வாழ்ந்து வருபவரே நம்குரு 'யோகி ஸ்ரீராம் பாபா' அவர்கள். அவர் மறு மையை முழுமையாக உணர்ந்த தால் இப்போதிருக்கும் வாழ்வியல் முறையை மாற்றி மறுமையை உணர்த்தி ஆனந்த வாழ்விற் குண்டான பாதையை சத்சங்கத்தின் மூலம் விளக்கிவருகிறார்.

அவ்வாறு நடக்கும் சத்சங்கத்தில் எனக்கு ஏற்பட்ட நிகழ்வை இங்கே பதிவிட விரும்புகிறேன். நான் குருவிடம் வந்த ஆரம்ப காலகட்டம் (2018) பிரதி மாதம் ஞாயிறு தோறும் காலை 6.00 மணிக்கெல்லாம் சத்சங்கத்தை தொடங்கிவிடுவார். முதல் ஆளாக



கலந்துகொண்டு கடைசி ஆளாக வெளியே வரவேண்டும் என்று நினைப்பேன். ஆனால் ஞாயிறு தூக்கத்திற்கு நான் மட்டும் விதிவிலக்கா என்ன என்பது போல் நேரம் தள்ளியே கலந்து கொள்ளும் சூழல் நிலவும்.

பலநாள் முயற்சிக்கு பின் காலை 6.00 மணிக்கு கலந்து கொண்டதால் சற்றே பெருமைபட்டேன். அதை எப்படி நம்குரு உணர்ந்

சொ. அகஸ்டின்

தாரோ தெரியவில்லை சத்சங்கம் நடைபெறும் போதே இடையில் கூறினார் "விதியை மதி வெல்லுமேயானால் அதுவே விதியாகும்" என்றார். அது எனக்கே சொல்லபட்ட வார்த்தையாகவே நான் உணர்ந்தேன். சிலமணி நேரம் கடந்தது. நான் குருவிடம் கூறினேன், இங்கு நடக்கும் சத்சங்கம், தியானம், அன்னதானம், நான் யார் என்பதை அறிதல் போன்றவை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளதை அறிகின்றேன். மிக்க மகிழ்ச்சி. ஆனால் நான் ஏன் உங்களை சந்திக்க வேண்டும். அதன் தேவை என்ன என்று வினாவினேன்.

சில வினாடிகள் நம்குரு 'யோகி ஸ்ரீராம் பாபா' அவர்கள் என்னையே உற்று நோக்கிவிட்டு பின்பு கூறினார்கள். நீங்கள் இங்கு தானாக வரவில்லை உம் தந்தை பனிரெண்டு ஆண்டுகளாக உம்மோடு பயணித்து உம்மை இங்கு சேர்த்த பின்பு தான் அவர் சாந்தி அடைந்தார் என்றார். என் தந்தை என்னோடு பயணித்ததை காட்டிலும் அவர் இறந்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஆனதை மிகச்சரியாய் எப்படி சொன்னார் என்பதில் தான் எனக்கு ஆச்சர்யமாக இருந்தது.

மேலும் சபைக்கு வருபவர்களின் நிலையை குரு பார்ப்பதில்லை மாறாக அவர்களின் ஆன்மாவின் நிலையையே பார்ப்பதாக கூறுவார். அவ்வாறாக தான் என் தந்தையின் ஆன்மாவையும் பார்த்திருக்கிறார் என்பதை உணர்ந்தேன்.

இவ்வாறாக ஆன்மாவை பற்றின தகவல்களை சத்சங்கத்தின் வாயிலாக கூறிக்கொண்டே இருப்பார். அதன்படி நம்குரு எழுதிய குருவைத் தேடி புத்தகம் வெளிவந்து சில மாதங்கள் இருக்கும் புத்தகத்தின் தொடர்புடைய போன ஜென்மத்தில் என்னுடன் இருந்த ஒரு நபர் வர இருக்கிறார் முடிந்தால் அவர் முகத்தை பார்த்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு கதையைக் கூறுகிறேன் என்று கூறினார்.

இருக்கிற ஜென்மத்தையே புரிந்துகொள்ள முடியவில்லை. இதில் போன ஜென்மமா என்று எனக்குள்ளே ஓடியதை காட்டிலும் அவரை காண்பதே எனக்கு ஆவலாக இருந்தது. ஆவல் குறைவதற்குள் குருவிற்கு அலைபேசி வந்தது. எதிர் திசையில் இருந்து யாரோ விலாசம் கேட்கிறார்கள். குரு அவருக்கு விலாசம் கூறிவிட்டு பாடத்திற்குள் சென்றுவிட்டார்.

நாங்களும் பின்தொடர்ந்ததால் கவனம் பாடத்திற்குள் சென்றது. சில நிமிடங்கள் கழிந்தது எப்போதும் போல் குருவை சந்திக்க நபர்கள் வருவது வழக்கம். அதுபோல் ஒரு இளைஞர் வந்தார். அவர் முகம் பூமியை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தது. குருவிடம் ஆசி வாங்கினார் குரு அவரை அமரசொன்னார் அவர் அமரவில்லை இருவரும் சில வினாடிகள் பேசினார்கள். அவர்கள் பேசியது எவர் செவிக்கும் எட்டவில்லை புறப்படுகிறேன் என்று கூறிவிட்டு நிமிர்ந்து பார்க்காமலே புறப்பட்டு விட்டார்.

இந்நிகழ்வு மின்னல் போல் நடந்து முடிந்தது. எங்களை பார்த்து குரு கேட்டார் வந்தவரது

முகத்தை பார்த்தீர்களா என்றார். அப்போதுதான் நினைவுக்கு வந்தது குரு சொன்ன நபர் இவரென்று, ஆனால் குரு கூறிய கதைகளை கேட்க ஆரம்பித்ததால் அவர் கூறியதை மறந்துவிட்டதால் வேறுவழியில்லாமல் மௌனத்தை பதிலாக கொடுத்தோம்.

இவ்வாறாக பல நிகழ்வுகள் சத்சங்கத்தில் நடப்பதுண்டு ஒருவருடைய ஆன்மா அல்லல்படுவதும், அமைதி அடைவதும் மரணத்திற்கு பின்பு நிகழும் நிகழ்வாகும் ஆனால் மரணம் என்ற சொல்லை கேட்டவுடன் மக்கள் திடுக்கிடுகிறார்கள். அதற்கு காரணம் பொன், பொருள் அதிகாரம், ஆடம்பரம், புகழ் இவைகளை விட்டு பிரிந்துவிடுவோமோ என்றும் மற்றும் பலர் மனைவி, மக்களை விட்டு பிரிந்துவிடுவோமோ, இன்னும் பலர் தாய், தந்தையர், சகோதர, சகோதரிகள், உற்றார் உறவினர் நண்பர்களை விட்டு பிரிந்து விடுவோமோ என்ற சிந்தையோடு இருக்க, வேறு சிலரோ முரட்டு குணத்துடனும் வெட்டுக்கும், குத்துக்கும், கொள்ளைக்கும் துணிந்து தீய செயலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் மரணத்திற்கு சிறிதும் அஞ்சாதவராய் எந்த நேரத்திலும் மரணம் வரலாம் என்ற சிந்தனையோடு செயல்பட்டு சித்தாந்தம் ஏதும் இல்லாமல் செயலாற்றி வருகின்றனர்.

இன்னும் ஒரு வகையார் உண்ணுவதும் உறங்குவதும் சுகமாய் இருப்பதை தவிர வேறு ஒன்றையும் எண்ணாதவராய் கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! என்று நினைத்து கடவுளும் இல்லை ஆத்மாவும் இல்லை முன் ஜன்மமும் இல்லை பின் ஜன்மமும் இல்லை பாவமும் இல்லை புண்ணியமும் இல்லை என்று சகட்டு மேனிக்கு பேசிவிட்டு எப்படியாவது பணத்தை சம்பாதித்து சுகமாய் வாழ்வதே சொர்க்கம் அப்படியில்லாமல் வாழ்வதே நரகம் என கூறிகொண்டு வாழ்கின்றனர்.

மேலே குறிப்பிட்ட இம் மூன்று நிலையிலுள்ள மக்கள் என்றைக்காவது மறுமையை பற்றி எண்ணி இருப்பார்களேயானல், இந்நேரம் நம்குரு 'யோகி ஸ்ரீராம் பாபா' விடம் சரணாகதி அடைந்திருப்பார்கள். அவரை சந்தித்த பின்பு பிறருக்கு தீங்கு செய்யாதிருத்தலும், ஆசை படாதிருத்தலும், பற்றற்று இருத்தலும், அனைத்து உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதலும் போன்ற சிந்தனை எட்டியிருக்கும் அவ்வாறு செயலாற்றும் போது இம்மையில் இன்பமாக வாழும் கலையை கற்றுக்கொள்ளலாம்.

ஆனால் அவ்வாறு செய்யாமல், மறுமையை உணர்த்த கூடியவரிடத்தில் இழந்ததைக்கூறி மீண்டும் அதை பெற்றுத்தர வேண்டி காத்திருப்பவரே அனேகர் அனேகர். ஆகவே அன்பர்களே! நம்குருவின் ஆற்றலை புரிந்துக் கொண்டு அவர் பாதத்தில் சரணாகதி அடைந்து விடுங்கள் "இனி பிறவா வரத்தை அளிக்க கூடியவர் பிறப்பின் பலனையும் அளிப்பார்"

நன்றி வணக்கம்.

குரு வாழ்க குருவே துணை. ●

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.12.25

உங்களின் செயல்கள் யாவையும், மன்னிக்கும் தன்மை உடையதாகவும், இரக்க குணமும், அரவணைப்பும் உள்ளதாக இருக்கும் போது அதுவே உங்களுக்கு ஏற்படும் வலிகளை நீக்கும் வலி நிவாரணியாக இருக்கும்.

02.12.25

சூரியன் உதிக்கும் போது, ஏரி, குளங்களில் உள்ள அனைத்து தாமரை மொட்டுக்களும் மலர்ந்து விடுவதில்லை. மலரும் தருவாயில் உள்ளவை மட்டுமே மலர்கின்றன. மற்றவை உரிய நேரம் வரும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால் அனைத்தும் விதிப்படி மலர்ந்தே ஆக வேண்டும். இந்த ஞானம் புரிந்தால் விரக்தி எங்கிருந்து வரும்.

03.12.25

இரவிலே சூரியன் இல்லாததை வைத்து சூரியன் இல்லை என்று கூற முடியுமா? அப்படியே இல்லை என்று கூறினால் அது எவ்வளவு அவசர புத்தியோ, அதுபோன்றது தான் தனக்கு தெரியாததை இல்லை என வாதிப்பது. எல்லாம் எல்லோருக்கும் தெரிகின்ற நிலையில் அமைந்தது இல்லை இந்த உலகம்.

04.12.25

ஒரு சமயம் நாம் விரும்புவதையே, இன்னொரு சமயம் வெறுக்கின்றோம். விரும்புவதாலோ, வெறுப்பதனாலோ, இவ்விரண்டில் இருந்தும் நாம் ஒதுங்கிவிட முடியாது. அதைப்போலவேதான் இன்பமும், துன்பமும். இரண்டையும் வேறாகப் பார்க்காமல் சமமாக பார்க்க கற்றுக்கொள்வதே ஞானம்.

05.12.25

இறைவனுக்கு உங்களது அப்பழுக்கற்ற அன்பையும் அசைக்க முடியாத நம்பிக்கையையும் தருவதை விட நீங்கள் காணிக்கையாக

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

தரும் தேங்காய், பழம், உங்களின் தலை முடி இவை உயர்ந்ததா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

06.12.25

எப்போதும் துன்பத்தில் இருப்பவனால் கடவுளைத் தேட மட்டுமே முடியும். அந்த துன்பத்தை ஏற்றுக் கொண்டவனால் தான் கடவுளை உணர முடியும்.

07.12.25

ஆன்மீக வழியில் நடப்பது போல் பிறருக்காக பாவனை செய்வது, ஒருபோதும் தன்னை அறிதல் ஆகாது. இறைவனையும் அறிதல் ஆகாது. எனவே இறைவனுக்கு நீங்கள் வைக்கும் விண்ணப்பங்கள் உதட்டளவில் இல்லாது, இதயத்தில் இருந்தே இருக்கட்டும்.

08.12.25

பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய மூன்றும் ஆன்மீக வளர்ச்சியின் மூன்று பரிணாமங்கள். பக்தி என்பது தொடக்கப்பள்ளி, அது ஒருவரை ஞானத்திற்கு இட்டுச்செல்லும். ஞானம் என்பதே உயர்நிலைக் கல்வி. ஞானத்தின் வாயிலாக அனைத்தையும் பிரம்மம் என்று உணர்தலே வைராக்கியம் ஆகும்

09.12.25

தீக்குச்சியை ரசாயன கலவையில் உரசினால் தீபிழம்பு வெளி வரும். தண்ணீரில் உரசினால் தீபிழம்பு வெளி வருமா? அதே போல் உன் அறிவை இப்பிரபஞ் சத்தில் நிறைந்திருக்கும் பிரமத்தின் மீது உரசினால் உனக்குள் மறைந் திருக்கும் தெய்வீகம் வெளிப்படும். வேறு எதன் மீதாவது உரசினால்?

10.12.25

யார் அலைந்தாலும் நீ அலையாமல் ஊர் அலைந்தாலும் உணர்வலையாமல் "ஓ"மென் றிருப்பது எக்காலம்.

11.12.25

ஒரு மலரை பறிக்கும் போது அது இறந்து விடுகின்றது என்று எவன் உணர்ந்து கொள்கின்றானோ அவனே ஆன்மாவை அறிந்து கொள்ள முடியும்.

12.12.25

காலம் காலமாக மரத்தில் இருந்து ஆப்பிள் விழுந்து கொண்டு தான் இருக்கிறது. ஆப்பிள் கீழே விழுவது என்பது மெய்ஞானம். அது எதனால் விழுகிறது என்பதை நியூட்டன் விளக்கியது விஞ்ஞானம். விழுவதற்கான காரணத்தை விளக் கிய நியூட்டனால் ஆப்பிளை விழச் செய்ய இயலாது. எனவே விஞ் ஞானம் என்பது எப்போதும் மெய்ஞானத்திற்கு கட்டுப் பட்டதே.

13.12.25

தண்ணீரில் கல்லைப்போட்டால் அலைகள் தோன்றி கரை வரை யிலும் பரவும். அதுபோலவே நம் மனதில் எழும் எண்ணங்களும், நல் லதோ, கெட்டதோ, அது உடல் முழுவதும் பரவி நல்ல எண்ணங்களுக் கேற்ப, நல்ல செயல்களையோ, தீய செயல்களையோ செய்கின்றோம்.

14.12.25

வீட்டை காக்கும் நாய் தன் எஜமானனுக்கு நண்பனாய் இருந் தால் தொந்தரவு செய்யாது வாலை ஆட்டி அவரை அனுமதிக்கும். இல்லை என்றால் விடாமல்

அவரைப் பார்த்து குரைக்கும். அதுபோலவே மாயை என்ற துன்பங்கள் நம்மை துரத்தாமல் இருக்க இறைவனை நண்பனாக்கிக் கொள்ளுங்கள்.

15.12.25

அறிவு பந்தங்களை ஏற்படுத்தி நம்மை கட்டிப்போடும். அவ்வித பந்தங்களில் இருந்து விடுபடுவதே பிரம்மம் ஆகும்.

16.12.25

குருவை நம்பும் சீடர்களுக்கு அவர் நன்மை மட்டுமே செய்து வருகின்றார். சில நேரங்களில் குரு செய்யும் காரியம் உங்களுக்கு புரியாமல் போகலாம். ஆனால் அவர் காரணம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார். அதுவும் நமது நன்மைக்காகவே என்பதை புரிந்து கொண்டால் குரு நமது தோழனாவான்.

17.12.25

உங்களின் வேலை நிமித்தம் இறைவனிடம் செல்ல முடிய வில்லையா? ஆன்ம சாதனை செய்வதற்கும் நேரமின்மையா? யோகா, தியானம், நேரமில்லை, பரவாயில்லை. இறைவன் உங்களிடம் கேட்பதெல்லாம் அன்பு ஒன்றையே! அன்பைக் காட்டத் தொடங்குங்கள் மற்றவற்றை இறைவன் பார்த்துக்கொள்வான்.

18.12.25

ஒவ்வொரு ஆண்டும் நம்மை விட்டுச் செல்லும்போது நம் முடைய ஆயுளில் ஒரு ஆண்டு கழிந்துவிட்டது என்று உணர்பவன் வாழ்க்கையை கொண்டாடத்தில் கழிக்க விரும்ப மாட்டான்.

19.12.25

தியானம் செய்ய முயற்சிக்காதீர்! செய்யமுடியாது. ஏனெனில் தியானம் ஏற்கனவே உள்ளது. உள்ளதை எப்படி செய்யமுடியும். ஆனால் அதற்குள் செல்ல முடியும். எனவே, தியானத்திற்குள் செல்லுங்கள்! தியானத்தை செய்ய முயற்சிக்காதீர்கள்.

20.12.25

இறைவனின் படைப்புகளின் மேல் கவனம் வைக்காமல் இறை வனின் மேல் கவனம் வைப்பதே! இறைவனைக் காண எளிய வழியாகும்.

21.12.25

கடவுளை அறிந்தவன் பக்தன். தன்னை அறிந்தவன சித்தன். இரண் டையும் அறியாதவன் பித்தன்.

22.12.25

குப்பையை சுத்தம் செய்ய வேண்டும் என்றால் அதை ஆராயக் கூடாது கூட்டித் தள்ளிவிட வேண்டும். அதுபோலவே தன்னை அறிய வேண்டிய ஒருவன் தன்னை மறைத்துக் கொண்டிருக்கும் தத்துவங்கள் அனைத்தையும் கூட்டித் தள்ளாது அதை ஆராய் வதில் பயனில்லை.

23.12.25

உங்களது அன்றாட செயல்கள் அனைத்தையும் யார் தியானத் தோடு செய்கின்றார்களோ, அவர் களது செயல்கள் அனைத்தும் மரணத்தையும் கடந்து இறவா நிலையை அடையும். அதன்பிறகே விழிப்புணர்வு என்பதே சொர்க்கம், விழிப்புணர்வு இன்மையே நரகம்

என்பது விளங்கும்.

24.12.25

உலகியல் வாழ்க்கைக்கு காரண மான புலன்வழி செல்லுகின்ற பொறிகளை மாற்றி குருவின் திருவடிகளில் மனதை செலுத்தும் பக்குவம் உடையவனே சீடன் எனப்படுவான்.

25.12.25

நாம் எப்போதும் மறக்க வேண்டிய இரண்டு விசயங்கள். 'அடுத்தவர் நமக்கு செய்த தீமை. நாம் பிறருக்கு செய்த நன்மை' இவற்றை நினைத்திருந்தால் இவற் றின் கர்ம பலனை நாம் அனுபவிக்க வேண்டியதிருக்கும்.

26.12.25

நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய இரண்டு விசயங் கள். 'கடவுள், மரணம்.' இவை இரண்டையும் நாம் எப்போதும் நினைத்தபடி இருக்க வேண்டும். அப்போது தான் நாம் தீயதை தவிர்த்து நன்மையை செய்வோம்.

27.12.25

வெறும் பஜனை, அல்லது ராமா, கோவிந்தா. என்று ஜபித் தால் மட்டும் போதாது. நல்ல பழக்கவழக்கங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். நற்குணங்களை வளர்த்து நற்பெயரை வாங்க வேண்டும். அப்போது தான் நமக்குள் இருக்கும் இறை தன்மை வெளிப்படும்.

28.12.25

இன்றைய ஆன்மீக தலைவர் களும், அரசியல் தலைவர்களும், மக்களின் பொருளாதாரத்தை மேம் படுத்துவதில் மட்டுமே கவனமாக இருக்கின்றார்கள். மக்களின் குணத்தை மேம்படுத்துவதில் எவரும் கவனம் செலுத்தவில்லை. மக்களிடம் நிரந்தர அமைதி வர வேண்டுமாயின், குணத்தை மாற்று வதே குறிக்கோளாக கொள்ள வேண்டும்.

29.12.25

விலை மதிப்பற்ற நேரத்தை வம்பு பேச்சிலும், பிறரது நடத்தையை குறை கூறுவதிலும் ஏன் வீணடிக்க வேண்டும். பிறருக்கு எதிராக பொறாமை, வன்மம், வெறுப்பு, கோபத்தை வளர்த்துக் கொள்ளும் தீய செயல் ஒருநாள் நம்மீதே திரும்ப வாய்ப்புள்ளது அல்லவா?


30.12.25

நீங்கள் கடவுளின் மீது நம்பிக்கை கொண்டாலும், கொள்ளாவிட் டாலும், கடவுளின் பிள்ளைகளே, கடவுள் ஆயிரம்தாய்க்குசமமானவர். அதால்தான் உங்களை, கொஞ் சுகின்றான், பாதுகாக்கின்றான், கோபப்படுகின்றான். கடவுளின் கோபமும் அவரின் அன்பின் வெளிப்பாடு என்பதை நினைவில் வையுங்கள்.

31.12.25

சிறிதளவு நன்மைக்காகவோ, லாபத்திற் காகவோ, இறைவனை வழிபடுதல் கூடாது. ஏனெனில் நாம் கேட்கும் வரை இறைவன் காத்திருக்கின்றார் என்று பொருள் படுகின்றது. நம்முடைய சரணாகதிக் காகவே இறைவன் காத்திருக்கின்றாரே அன்றி, தன்னை புகழட்டும் என்று ஒருபோதும் இறைவன் காத்திருப்பதில்லை. ●

வாசகர் குரல்...



சித்தர்களின் சீவசமாதி தரிசனத்தில், இலங்கை சித்தர் ஸ்ரீ முருகேசு சுவாமிகளின் சரிதமும் அவரின் குரு அம்பத்தூர் ஸ்ரீ கண்ணையா யோகி அவர்களின் சரிதமும் வியப்பையும், ஆனந்தையும் தந்தது. இவர்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கு நாங்கள் பெரும்பேறு பெற்றிருக்கின்றோம். ஆசிரியர் திரு. ஸ்ரீராம் பாபா அவர்களுக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களும், நன்றிகளும்.

– திரு. ஜீவானந்தம், அம்பத்தூர்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம் என்ற கட்டுரையின் மூலம் "சீடன் குருவை பார்த்தே கற்றுக் கொள்ள வேண்டுமே அன்றி குரு கூறும்போது கற்றுக் கொள்ளலாம் என எண்ணினால் அவன் ஒருபோதும் சீடனாக முடியாது என்ற பொருளை உணர்ந்து கொண்டேன். உங்கள் எழுத்துக்களை படிக்கும் போது, உங்களுக்கு இருக்கும் எழுத்து வேலைகளுக்கு நடுவில் நீங்கள் செல்லும் இடமெல்லாம் உங்களுக் குண்டான முத்திரையை பதிக்கிறீர்கள். எம்மைப் போன்று பலரும் பயன்பெறுவதைப் பார்க்கும் போதெல்லாம் ஆனந்தம் குருவே. கோடி வணக்கங்கள் குருவே.

– திருமதி. சுகுணா ராஜசேகர், குரோம்பேட்டை.

கோடானுகோடி நன்றி!

யோகி ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் தித்திக்கும் கற்கண்டாய் இனிக்கின்றன. மருத்துவம் பகுதியில் வெளிவந்த ஸ்டார் புரூட்டில் இவ்வளவு நன்மைகளா? இவ்வளவு நாள் இது தெரியாமல் இந்தப்பழத்தை உண்ணாமல் உதாசீனம் செய்துவிட்டோமே என்று வருந்தினேன். இனி எங்கு கிடைத்தாலும் விடமாட்டேன். நன்றி அய்யா!

– திருமதி. கல்பனா ராஜேந்திரன், கோவை.

இம்மாத இதழில் பாபாவின் வண்ணப்படத்தில் சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தை புத்தக

வடிவில் பாபா மார்போடு அணைத் திருப்பதை நமது குரு அவர்கள் தெய்வீக சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருப்பது பேரானந்தமாக இருந்தது. புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கூறிய குருவிற்கு நன்றி! திருவருள் தேடி படித்துக் கொண்டி ருந்தபோது என் வீட்டின் அருகில் பாபா வண்டி பாபாவின் பாடல் ஒலித்துக் கொண்டே சென்றது. சாய்சரிதம் மிகவும் அற்புதம். "குரு வின் வார்த்தைக்கு மறுவார்த்தை இல்லை" என்ற வரிகள் ஞாபகத் திற்கு வந்தது. இலங்கை பயணக் கட்டுரை எழுதிய திரு. பாலாஜி அவர்களுக்கு மிக்க நன்றி!!

– திருமதி. இந்துமதி, அயனாவரம்.

சாய்பாபாவின் கருணை கட்டுரை படித்தபோது எண் கண்ணில் கண்ணீர் பெருகியது. நானும் தீவிர சாயி பக்தைதான். ஒரு முறை என் கால் கட்டை விரலில் பெரிய கட்டி ஒன்று வந்து வேதனைப்படுத்தியது. மருத்துவர் அறுவைச்சிகிச்சை செய்ய வேண் டும் என்றதும் பயந்துபோய் பாபா விடம் கதறி அழுதேன். மறுநாள் காலையில் எழுந்து தூக்க கலக்கத்தில் பாத்ரூம் போகும்போது தெரியாமல் கதவில் கால் இடித்துக் கொண்டு கட்டி தானாகவே உடைந்து குணமாகியது. நன்றி தேவா!

– திருமதி. பாக்கியவதி, பெருங்களத்தூர்.

வணக்கம் குருவே ! இம்மாத இதழில் அமுத மொழியில் கூறப் பட்ட 'ஒருவருடைய நம்பிக்கை எந்தளவிற்கு இருக்க வேண்டும்' என்பதை எதார்த்த முறையில் குறிப் பிட்டிருந்தது மிகவும் பிடித்திருந்தது. அதைதொடர்ந்து வாழ்வியல் நெறி காட்டும் மெய்ஞானத்தில் வரும் கதைகளுக்குள் ஞானம் ஒளிந்திருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் சாய் சரிதத்தில் பாபாவின் வார்த்தை கேட்டு உடலில் ஏறிய பாம்பின் விஷம் இறங் கிய போது பாபாவின் "நம்பிக்கை பொறுமை"யை உணர முடிந்தது.

– திருமதி. தனம், குன்றத்தூர்.

அமுத மொழி, சாய் சரிதம், மெய்ஞானம், திருவருள் தேடியுடன் பாபாவின்கருணை, அகஸ்டின் அவர்களின் கட்டுரை, இலங்கைப் பயணம் என பல்சுவை ஆன்மீக மாத இதழாக சென்ற இதழ் கரும்பென் இனித்தது. வாழ்க உமது தொண்டு அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

– புலவர். பொண்ணன், திண்டுக்கல்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால் காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: 9941816692

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. சுவாமிநாதன் குடும்பத்தார், லண்டன். ரூ.15000.
திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி. அர்ச்சனா சாய். OMR.ரூ.1000.
திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.
திருமதி. உமா மகேஸ்வரி. அயனாவரம். ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி. சுகன்யா துரைராஜ். சென்னை. ரூ.500.

திரு.லோகேஸ்வரி கார்த்திக், வாடிப்பட்டி. ரூ.500
திருமதி. ஜானகி கண்ணன், அயனாவரம். ரூ.500.
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி, AYK. ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.
திரு. ராஜேஷ் மித்திரன், சென்னை. ரூ.500
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திருமதி. சுபஸ்ரீ, கோவை. ரூ.500.
திருமதி.பி. மகாலட்சுமி, மதுரை. ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திருமதி. சரோஷா, பழைய சீவரம் ரூ.500
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.
திருமதி.லலிதா, துரைப்பாக்கம், ரூ.230.
திரு.தே. அட்சயா தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திருமதி. திலகம் கனி, கதிர். ரூ.200.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க்,
பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு. கோபால், விருகம்பாக்கம் . .200
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.101.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு.செல்வவிநாயகம், மணலி. ரூ.100.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.100.
திருமதி.லதா, அயனாவரம்.ரூ.100
திருமதி. சாந்தி, அயனாவரம். அரிசி.மூ–1
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ–1.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்
99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068